www.padippakam.com

பெண்ணடிமை தீராமல் மண்ணடிமை தீராது

# பெண் உரிமை

நவ - டிச 2001




படிப்பகம்

www.padippakam.com

| பெண் உரிமை | உள்ளே . . . | பக்கம் |
|---|---|---|
| 1–6 | ☞ பெண் உரிமைக்காக | 3 |
| | ☞ கவனத்திற்கு வராத பெண்களின் மனச் சிக்கல்கள் | 6 |
| நவ – டிச 2001 | ☞ வசுமதியின் கடிதம் | 9 |
| தனிச் சுற்றுக்கு மட்டும் | ☞ கவிதைக் கோப்பு | 12 |
| விலை ரூ. 5.00 | ☞ புரட்சியையே உயிர்மூச்சாக்கிய க்யூஜின் | 15 |
| | ☞ எதிரொலிப்பு | 20 |
| ஆண்டு சந்தா ரூ. 30.00 | ☞ அர்ப்பணிப்பு | 22 |
| | ☞ தெலங்கானா இயக்கத்தில் பெண்கள் | 23 |
| தொடர்புக்கு : அஜிதா 658 (17/34 இராணி அண்ணாநகர், கே.கே.நகர் சென்னை – 600 078 | ☞ பெண் ஆட்டோ ஓட்டுநரிடம் ஒரு நேர்காணல் | 28 |
| | ☞ சித்தி – மெகாத் தொடர் பற்றிய விமர்சனம் | 30 |



படிப்பகம்

www.padippakam.com

# பெண் உரிமைக்காக...

## உயர்ந்து வரும் அநியாய விலைவாசிக்கெதிராய் போராடுவோம்!

அன்பார்ந்த பொதுமக்களே!

இன்று விலைவாசி உயர்வால் தமிழகம் முழுவதும் எரிமலையாய் எரிந்துக் கொண்டிருக்கிறது. காலம் காலமாக நமக்கு யாராவது நன்மை செய்யமாட்டார்களா என்ற நம்பிக்கையுடன் ஓட்டு போட்டு தேர்ந்தெடுத்த மக்களுக்கு அ.தி.மு.க. அரசு கடந்த மாதம் மிக அதிகமான அளவில் திடீரென விலைவாசியை உயர்த்தி மக்கள் மீத தாக்குதலை தொடுத்துள்ளது. மின்சாரம், பஸ் கட்டணம், ரேஷன் அரிசி, பால், கல்வி, சிமெண்ட், சமையல் எண்ணெய், யூரியா, அரசு மருத்துவம், வாகனம் என்று அனைத்து கட்டணங்களையும் உயர்த்தியது. "நிதி நெருக்கடி. . . அரசுக்கு 700 கோடி பற்றாக்குறை. . . இத்தகைய காரணங்களால் விலைவாசி உயர்வு தவிர்க்க முடியாதது. இதை செய்யாவிட்டால், அரசாங்கம் திவாலாகிவிடும், என்று தமிழக அரசு கூறுகிறது. அரசு சொல்வது போல் இன்று நிதி நெருக்கடி உண்மைதான்.

ஆனால், ***இந்த நிதி நெருக்கடி எதனால் ஏற்பட்டது? இது தீர வழி என்ன?*** 90–களிலிருந்து புதிய பொருளாதார கொள்கைகள், தாராளமயமாக்கல் ஆகியவற்றை மைய–மாநில அரசுகள் தொடர்ச்சியாக நடைமுறைபடுத்தி வருகின்றன. ஒருபுறம் ஏகாதிபத்தியத்திற்கு நாட்டை திறந்துவிடுவது, அவர்களுக்கு ஏராளமான சலுகைகள் கொடுப்பது, மற்றொருபுறம் அனைத்து வரி சுமைகளையும் மக்கள் மீது சுமத்துவதுதான் இந்த புதிய பொருளாதார கொள்கைகளின், தாராளமயமாக்களின் சாரம்.

மக்களுக்கு கொடுக்கப்படும் மானியங்களால்தான் அரசாங்கத்திற்கு நெருக்கடி என்று அரசு கூறுகிறது. ஆனால், மைய பட்ஜெட்டில் மக்களுக்கு கொடுக்கப்படும் மானியம் வெறும் 7% மட்டுமே! இந்த சிறிய அளவுத் தொகையால் நெருக்கடி வருவதாகக் கூறுவது மிகப் பெரும் மோசடியே! மேலும் இந்திய அரசின் வருவாயில் நாம் செலுத்துகின்ற (மறைமுக வரி, ஷாம்பு, சோப்பு, தேங்காய் எண்ணெய், பேஸ்ட், பவுடர். . .) வரி 76,2%. பணக்காரர்கள் மீதான (தொழில்வரி, சொத்து வரி) வரி வெறும் 23.8% மட்டுமே! முதலாளிகள், பணக்காரர்கள் கட்ட வேண்டிய இவ்வளவு குறைவான வரியை கூட அவர்கள் கட்டாததால் ஏற்கனவே ஏகப்பட்ட வரிகளினாலும், விலைவாசியாலும் வாழ்க்கையை தள்ளும் ஏழை மக்களின் மீது மொத்தமாக சுமத்த பார்க்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com

கடந்த 10 வருடமாக வெளிநாட்டு முதலாளிகளுக்கும், பெரிய பெரிய முதலாளிகளுக்கும் ஏகபட்ட பன்னாட்டு நிறுவனங்களுக்கு இலவச மின்சாரம், தண்ணீர், நிலம் மற்றும் 5 வருடங்களுக்கு வரியே கிடையாது. மேலும் பெரு முதலாளிகளின் பன்னாட்டு நிறுவனங்கள் பல்லாயிரம் கோடி வரி கட்டாமல் ஏமாற்றுவது. இவற்றை வசூலிக்க தமிழக அரசு எப்போதும் முயற்சித்ததில்லை. இதற்கு ஒரு உதாரணம் தான் 1999–2000 ஆண்டில் வணிகம், உள்துறை, வருவாய் போன்றவற்றில் 8863.60 கோடி வருவாய் வரவேண்டி இருக்கிறது.

அடுத்ததாக, அரசியல்வாதிகளிடமும், பெரும் முதலாளிகளிடமும், பணக்காரர்களிடமும் 1,10,000 கோடி கருப்பு பணம் குவிந்து கிடக்கிறது. இதுமட்டுமல்லாமல் அரசு வங்கிகளுக்கு பெரு முதலாளிகள் செலுத்த வேண்டிய கடன் 60,000 கோடி ரூபாய், ஹர்ஷத் மேத்தா ஊழல், U.T.I ஊழல் (      ) லல்லு பிரசாத் யாதவ், ஜெயலலிதா, கருணாநிதி போன்ற அனைத்து கட்சி அரசியல் பெருச்சாலிகள், அதிகாரிகள் ஆகியோரால் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் ஊழலால் திருடப்பட்டிருக்கின்றது.

மொத்தத்தில் வரி குறைப்பு, வரி நீக்கம் என சட்ட ரீதியாகவும், வரி ஏய்ப்பு, கறுப்பு பணம், வங்கி கடன் மோசடி, ஊழல் என சட்ட விரோதமாகவும் இங்குள்ள ஆளும் வர்க்கங்கள் பல இலட்சம் கோடிகளை பதுக்கி வைத்துள்ளன. இவர்களிடம் அநியாயமாக குவிந்து கிடக்கும் இந்த தொகையை முறையான ரீதியில் வாங்குவதற்கு எந்த அரசாங்கமும் தயாரில்லை. காரணம் அவர்கள் பெரிய பெரிய முதலாளிகளாக ஆவதே!

இன்னொருபுறம் ஏகாதிபத்தியத்தின் புதிய பொருளாதார கொள்கைகளினால் சிறு ஆலைகளை மூடுதல், ஆட்குறைப்பு, தனியார்மயமாக்குதல் போன்ற பல விஷயங்களால் வேலை வாய்ப்பு இல்லாமல் கோடிக்கணக்கான மக்கள் பசி பட்டினியில் வாடி தவிக்கின்றனர். கடந்த 10 ஆண்டுகளில் ஏற்கனவே பலமுறை உயர்ந்த விலைவாசி உயர்வினால் மக்களிடம் இருந்து 50,000 கோடி இலாபம்! ஏற்கனவே உயர்ந்த விலைவாசியால் தத்தளிக்கும் ஏழை மக்களுக்கு இந்த விலைவாசி அவர்களை குழி தோண்டி புதைப்பதே ஆகும். இதை எதிர்த்து போராடும் மக்களை மிக கொடூரமான ஒடுக்குமுறையை இந்த பாசீச ஜெ அரசு ஏவி வருகிறது.

இந்த திடீர் விலைவாசியை எதிர்த்து தமிழகம் முழுவதும் மக்கள் பெருமளவில் போராட்டத்தில் இறங்கினர். நிறைய பகுதிகளில் மக்களின் போராட்டங்களால் ரேஷன் கடைகளை திறக்க முடியவில்லை. ஆங்காங்கு சாலை மறியல். . . கொதித்தெழுந்த மக்களை, முக்கியமாக பெண்கள் விலைவாசியை ஏற்றினால் பஸ், ரேஷன் கடை ஆகியவற்றை அடித்து நொறுக்குவோம் என அரசாங்கத்திற்கு நேரடி சவால் விட்டனர். மக்களின் இப்போராட்டங்களை கண்டு அஞ்சிய அ.தி.மு.க. அரசு கண்துடைப்புக்காக (மிகக் குறைந்த அளவே) விலையை திடீரென குறைத்தது. ஜெயலலிதா "பாவப்பட்டு" மக்களுக்காக இந்த விலையை குறைப்பது போல ஒரு பிரம்மையை உருவாக்க பார்க்கின்றனர். இது நிச்சயமாக விலைவாசி குறைப்பு நாடகமே!



படிப்பகம்

www.padippakam.com

பொது மக்களே!

எந்த ஆளும் கட்சி அதிகாரத்திற்கு வந்தாலும் மக்கள் விரோத திட்டங்களையே நடைமுறைப்படுத்துகின்றன.

எனவே, இந்த அரசு நமக்கான அரசல்ல. இது பணக்காரர்களுக்கான, முதலாளிகளுக்கான அரசு. ஏகாதிபத்தியத்தின் கூட்டாளி. நாம் ஓட்டை போட்டு தேர்ந்தெடுக்கும் அனைத்து ஆளும் வர்க்கங்களும் நம்மையே ஏய்க்கின்றனர். அரசு சொல்லக்கூடிய நிதி நெருக்கடி அப்பட்டமாக நம்மை ஏமாற்றுவதற்காகத் தான். இந்தியா முழுக்க இந்த புதிய பொருளாதார திட்டங்களையும், உலகமயமாக்களையும் நடைமுறைபடுத்தி இந்தியாவை மற்றொரு சோமாலியாவாக மாற்ற பார்க்கின்றனர். காலம் காலமாக இவர்களால் ஏமாற்றப்பட்டு அன்றாடும் உழைத்து கால் வயிற்று கஞ்சிக்கு கூட கஷ்டப்படும் மக்களின் எதிர்காலம், குழந்தைகளின் எதிர்காலமும் விடிவு பெற, போராட்டமே வாழ்வின் விதி, என்று போராட்டப் பாதையில் அணி திரள்வோம்! மனிதன் வாழ்வதற்கு அடிப்படையான உணவு, உடை, இருப்பிடத்திற்கு கூட வழியின்றி கோழைகளாக பசி பட்டினியில் வாழ்வதை விட அரசின் இத்தகைய கொடுமைகளை எதிர்த்து போராடுவோம்!

உயர்ந்து வரும் அநியாய விலைவாசிக் கெதிராய் போராடுவோம்!

பாசிய அ.தி.மு.க.வின் காட்டாட்சியை முறியடிப்போம்!

– **ஆசிரியர்**

## *பொம்பளை*

"அவர் என்னை தினமும் அடிக்கிறாரும்மா!"
"ஏன்? என்னாச்சு?"
"பக்கத்து வீட்டுக்காரரோடு பேசினேன்னு"
"தப்பு தானே. . . நீ ஏன் பேசினே?"
"நேத்து வீட்டில இருக்க வேண்டான்னு கழுத்த பிடிச்சு வெளியில தள்ளிட்டாங்கம்மா"
"அய்யோ! என்ன தப்பு பண்ணினே?"
"எதிர் வீட்டு ஜானகியோட சினிமாவுக்கு போனேன்னு"
"அறிவிருக்கா உனக்கு? சினிமாவா சினிமா. புருஷன் இருக்கும் போது ஜானகியோட சினிமாவுக்கு ஏன் போனே?"
"மாமியார், மாமனார் கூட திட்டினாங்கம்மா."
"பெரியவங்க தானே! பொம்பளபுள்ளய ஏதாவது சொல்லுவாங்க விடு!"
"இவர் பக்கத்து தெரு லஷ்மியோட தினமும் சுத்திகிட்டு இருக்காரும்மா!"
"ஆம்பள இல்லையாம்மா! கண்டுக்கக் கூடாது!"
"என்னை கழுத்த பிடிச்சு தள்ளும்போது நானும் சும்மா விடலை! திருப்பி ரெண்டு
அடி கொடுத்துட்டுதான் வந்தேன்"
"அய்யோ. . . அய்யோ. . . நீ எல்லா ஒரு பொம்பளயா?



படிப்பகம்

www.padippakam.com

# கவனத்துக்கு வராத பெண்களின் மனச் சிக்கல்கள்



அபூர்வமாய் வாய்க்கும் சில ஒய்வான தருணங்களில் நாம் சாலையில் சுற்றும் முற்றும் கவனித்துச் செல்லும் போது ஓரமாக அமர்ந்திருக்கும் மனநலம் பாதிக்கப் பட்டவர்களை காண்பதுண்டு. ஏதாவது சில நிமிடங்களிலாவது அவர்கள் நிலைப்பற்றி நமக்குள் கேள்விகள் எழாமல் இருந்திருக்காது. நம்மில் பலருக்கும் இத்தகைய பாதிப்பாளர்களை பார்த்து ஒருவித பாசமும் அதே நேரம் அச்சமும் வருவதுண்டு. காரணம் நமக்கும் மனநலம் சிதைவடையும் வாய்ப்பு நூறு சதவிகிதம் உள்ளதை நாம் அறிந்திருப்பதுதான்.

மேலை நாட்டவர்களை விட இந்தியர்களுக்கு மனநலம் பாதிப்படையும் வாய்ப்பு குறைவு என்றுதான் இதுவரை நம்பப்பட்டு வந்தது. வாழ்க்கையை தத்துவம் சார்ந்து பார்க்கும் போக்கும், இந்தியர்களிடையே இருக்கும் குடும்பம் என்ற பிணைப்பையும், நம்மவர்களை மனநலம் பாதிப்படையும் சூழல்களிலிருந்து காப்பாற்றுகிறது. நகரமயமாதலும், தொழில்மயமாதலும் முன்காலத்தில் இந்தியர்களிடையே குறைவு என்பதாலும் இக்கருத்து நிலவி வந்தது.

மனநலம் பாதிப்படைந்த விஷயம், தீக்காயம் அல்லது புண் போல வெளியில் தெரியாது என்பதால், பாதிப்படைந்தவர்களை இனம் காண்பது மிக கஷ்டமான விஷயம். பலருக்கு மனம் பாதிப்படைந்தவர்கள் என்றால் உடுத்தியிருக்கும் துணியை கிழித்து விட்டுவிட்டு, காட்டுக் கூச்சலிட்டுக் கொண்டு அலைவார்கள் என்ற தவறான கருத்து இருக்கிறது. அதனாலேயே இவர்கள், மனநலம் பாதிப்படைந்தவர்களை தெரிந்து கொள்ள நேர்ந்தால், தனியறையில் அடைத்து குறைந்த அளவு தண்ணீரும் உணவும் கொடுத்து அவர்களது நோயை முற்ற செய்து விடுகிறார்கள்.

மனநல பாதிப்பு என்பது தனிப்பட்டவர்களுடைய பிரச்சனையாகத்தான் நமது சூழலில் கருதப்படுகிறது. மனநலம் பாதிப்படையாமல் தடுக்கும் முறைகள் பற்றியோ, தவறி பாதிப்படையும் பட்சத்தில், அவர்களுக்கு தர வேண்டிய சிகிச்சை முறைகள் பற்றியோ நமக்கு சரியான விழிப்புணர்வு இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

மனநலம் பாதிப்பதற்கான வாய்ப்பு ஆணைவிட பெண்ணுக்கு அதிகம். சமூகத்தில் பெண்களுக்கு நிலவி வரும் இரண்டாம் பட்ச மதிப்பும், பெண்களுக்கெதிரான வன்முறை, வறுமை, தன் வாழ்நாளில் பெண்கள் செய்ய வேண்டிய அதிகபடியான பாத்திரங்கள் (ஒரு கட்டத்தில் தாய், மனைவி, மகள், வீட்டு வேலைகளை கவனித்துக் கொள்ளும் பொறுப்பான வீட்டுக்காரி, வீட்டு பொருளாதார தேவைக்காக வெளியில் சென்று சம்பாதித்து வரும் இயந்திரம் என்று எத்தனையோ) காரணங்களை சொல்லலாம். கற்பழிப்பு, வேலையிடங்களில் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகும் பெண்களும் அதிக அளவில் மனநலம் பாதிக்கப்படுகிறார்கள்.

முடிவெடுக்கும் அதிகாரம் இல்லாமை, வேலை பளு சமமாக பிரிக்கப்படாமை, செய்யும் வேலைக்கு கூலி இல்லாமை, ஒரே மாதிரியான வேலையை திரும்ப திரும்ப செய்ய நேருதல் போன்றவைதான் அழுத்தமான சூழ்நிலையை பெண்களுக்கு உருவாக்குகிறது. மேலும் குடித்து விட்டு வரும் கணவன் அல்லது மனைவியை அடிக்கும் கணவன், கள்ள தொடர்புகள், போன்ற துன்பங்களும் அமைந்து விட்டால், பெண்களின் நிலைப் பற்றி கேட்கவே வேண்டாம்.

துன்புறுத்தல் காரணமாக தற்கொலை செய்துக் கொள்ளுதல், வரதட்சணை பிரச்சனைகள், குடும்பத்தில் ஏற்றுக்கொண்டுள்ள பாத்திரங்களினால் சந்திக்க நேரும் பிரச்சனைகள் என்று பாதிக்கப்படும் பெண்கள் இந்தியாவில்தான் அதிகம் என கணக்கெடுப்பு கூறுகிறது.

தெய்வ பிறவியாக பெண்களை சித்தரிப்பதன் காரணமாக, சுயத்தை இழந்து பெண்கள் வாழ நேர்கிறது. இதனால் உள்ளுக்குள்ளேயே மிகுந்த குழப்பங்களுக்கு ஆளாகி பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

பெண் பூப்பெய்திய காலகட்டம், பின் மாதவிடாய், பிரசவம், மாதவிடாய் நின்று போகும் காலம், இவற்றிலெல்லாம், பெண்களுக்கு அதிகமான அளவில் மன்பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

பாலியல் வேறுபாடு, வேலையிடத்தில் ஆரம்பித்து வீடு வரை நீக்கமர பரவியிருப்பதால், இது போன்ற அவமானங்களும், மதிப்பின்மையும் பெண்கள் மனதில் ஆழமாக பதிந்து விடுகிறது. இதுவே ஒரு கட்டத்தில் அவர்களை மனதளவில் பாதிக்கிறது.

மனநல பாதிப்பை, இரண்டு வகையாக அணுகலாம். 1. உடல் ரீதியாகவும், 2. உளவியல் ரீதியாகவும் பார்க்கலாம். உளவியல் ரீதியாக பாதிப்படைபவர்களை கண்டுகொள்ளும் முறையோ, அதற்கான மருத்துவ கவனிப்போ, பெரிய அளவில் இந்தியாவில் பின்பற்றபடவில்லை. உளவியல் ரீதியான பாதிப்பு பெண்களிடையேதான் அதிகமாக இருக்கிறது.

முற்றிய மனசிதைவு நோய்களை உடல் ரீதியாக கண்டுகொள்கிறார்கள். ஆனால் இதற்கு பயன்படுத்தும் சிகிச்சை முறைகளை, உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு பயன்படுத்த முடியாது. உடல் ரீதியான பாதிப்பு ஆண்–பெண் இருபாலருக்கும் சமமாகவே உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

முன்காலங்களில் ஆண்களுக்குத்தான் மனநல பாதிப்பு அதிகமிருப்பதாக நம்பப்பட்டது. இதற்கு சில கருத்துக் கணிப்புகளும் துணைபோயின. இப்போதுதான் இத் தவறான கணக்கெடுப்புக்கான காரணத்தை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். இந்த கணக்கெடுப்பு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் மனநல பாதிப்படைந்தவர்களை கொண்டு செய்யப்பட்டது. நம்மவர்கள் தான் பெண்களை மருத்துவமனைக்கே அழைத்து செல்வதில்லையே?

பொதுவாக, ஆண்களுக்குத்தான் குடும்ப பாரமும், பொறுப்பும் அதிகமிருப்பதாக நம்பப்பட்டதும் தவறான கருத்துக் கணிப்புக்கு காரணம் என்று சொல்லலாம்.

பிச்சைகாரர்கள், விலை மாதர்கள், கூலி வேலை செய்யும் பெண்கள், கல்வியறிவில்லாத பெண்களுக்கு மனபாதிப்பு அதிகம் வருவதாக தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இன்னுமொறு வேடிக்கையான கண்டுபிடிப்பு என்னவென்றால், தனியாக இருப்பதைவிட கல்யாணம் செய்துக் கொண்டால் பாதிப்பு அதிகமிருக்கிறது. அதே நேரம் விவாகரத்து, கணவனை பிரிந்து வாழும் பெண்களிடையேயும் பாதிப்பு அதிகமுள்ளது.

கல்வியறிவு இருப்பவர்களுக்கு மனபாதிப்பு குறைவாக இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளதுதான் நமக்கு ஒரே ஆறுதல் மற்றும் நம்பிக்கையளிக்கும் விஷயம்.

– சாம்பவி

## அறிமுகம்

*ஒவ்வொரு நண்பனுக்கும்*
*ஒவ்வொரு புதியவருக்கும்*
*கனவான்கள்*
*அறிமுகப்படுத்துவது*
*இப்படித்தான்!*
*தாழ்வாரத்துக்கிளி!*
*கீழ்வாரத்துப் பூனை!*
*தோட்டத்து நாய்!*
*வீட்டுப் பொண்டாட்டி*
*(ஹவுஸ் வைஃப்)*

*– விஜயன்*

## ஈவ் டீசிங்

*பார்வை அலைகளினால்*
*உடல் குறிகளுக்கு*
*அம்பு தொடுக்கின்றனர்*
*அம்பு தொடுத்ததினால்*
*இம்மண்ணுக்கு போன*
*சடலங்கள் எத்தனை!*
*வாய் பேச்சில் பதுங்கி*
*பெண்களுக்கு*
*பரிசாக விஞ்ஞான*
*படிநிலைகளில்*
*உடலை உருக்கும்*
*ஆயுதங்கள் எத்தனை!*

*– தமிழ்மணி*



படிப்பகம்

www.padippakam.com

சரவணபவ மேனேஜரின் மகளான ஜீவஜோதியை சின்னாபின்னமாக்கி, அவரின் கணவனை கொன்ற சரவணபவன் முதலாளி இராஜகோபாலனை கொலை வழக்கின் மீது கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என்றும்,

ரீடாவை சூறையாடிய சிறையதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டு, கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என்றும் 'பெண் உரிமை' தமிழக அரசை கோருகிறது.

அதே சமயம், ரீட்டா, ஜீவஜோதி. . . எண்ணற்ற பெண்களின் வாழ்வை சூறையாடும் காம வெறியர்களுக்கு பாடம் புகட்ட, இக்கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க சமூக மாற்றப் போராட்டப் பாதையில் அணி திரள்வோம், என 'பெண் உரிமை' தமிழக மக்களை அறைகூவி அழைக்கின்றது.

– ஆசிரியர்

# வசுமதியின் கடிதம்

நான் என்றும் பார்க்காத எனது உயிர் தோழி ஜீவஜோதிக்கு,

ஜோதி! நலமா என்று கேட்க மாட்டேன். ஏனெனில், தினமும் உன்னை பற்றியான செய்திகளை தினசரிகளிலும், நாளேடுகளிலும், டி.வி. செய்திகளிலும், பார்த்து கொண்டே இருக்கின்றேன். ஒரு சில நாட்களில் உன்னுடைய வாழ்க்கையில் எத்தனை மாற்றங்கள்! எவ்வளவு துன்பங்கள்! நான் உனக்கு ஆறுதல் சொல்ல விரும்பவில்லை. நீ அழவேண்டும். உன்னுடைய துக்கத்தை யாராலும் தீர்க்க முடியாது. துக்கத்தை வெளி கொணர நீ அழுதாக வேண்டும்.

ஜோதி! உன் அப்பாவின் முதலாளி, சரவணபவன் இராஜகோபாலன், ஏற்கனவே திருமணமான உன்னை மூன்றாவது மனைவியாக்க உன்னை படுத்திய பாடு கொஞ்சமல்ல. உன்னை பலமுறை பலவிதமான சித்ரவதைக்கு ஆளாக்கினான்! பணம் படைத்த பெரிய முதலாளியாயிருப்பினும், அந்த நயவஞ்சகனுக்கு சவாலிட்டு வேளச்சேரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாய், என்ற செய்தியை பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். ஏனெனில், நாளுக்கு நாள் பெண்கள் மீதான கொடுமைகள் அதிகரிக்கும் தருணத்தில் போராடும் பெண்களை கொடூரமாக ஒடுக்கும், இந்த சீர்கெட்ட ஆட்சியில் நீ துணிவாக புகார் கொடுத்தது என்பது, சரியான விஷயம்.

ஆனால், அந்த கொடிய ரௌடி கும்பல் உன்னையும், உனது கணவனையும் விரட்டி விரட்டி உங்கள் இருவரையும் பிரித்தது. உன்னிடமிருந்து உனது கணவரை பிரித்து



படிப்பகம்

www.padippakam.com

கொன்றுவிட்ட செய்தியை டி.வி.யில் பார்த்து நான் கதிகலங்கி போய்விட்டேன். நான் மட்டுமல்ல, தமிழகத்தில் பெரும்பான்மையான பெண்கள் கலங்கி போயினர். ஐயோ! எந்த சமூகத்தில் வாழ்கின்றோம், நாம்? உனது கணவரின் பிண அடையாளத்தை பார்த்து கதறிய உன்னுடைய அழுகை, இன்னமும் என் காதுகளில் ஒலிக்கின்றது. வேதனை தாளாத உன் முகம், என் கண்களை கலங்க வைத்தது.

பெண்களை விளையாட்டு பொம்மைகளாகவும், இன்ப கருவிகளாகவும் கருதும் இந்த ஆணாதிக்க சீர்கெட்ட சமூகம் உனது வாழ்க்கையை சின்னா பின்னமாக்கியது. தொழிலாளிகள், மற்றும் அவர்களின் குடும்பத்தாரை அடிமைகளாக்கி, அவர்களின் வாழ்வை சூறையாடும் முதலாளிகள் கூட்டத்தின் அங்கமான இராஜகோபாலின் காம வேட்கையை பூர்த்தி செய்ய நீ, தாக்கப்பட்டாய்! உன் கணவர் கொல்லப்பட்டார்!

ஆனால், ஜோதி உனக்கு ஏற்பட்ட கஷ்டங்களை நினைத்து நொந்து போவதை விட உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய இராஜகோபாலன் போன்ற நயவஞ்சகர்களை எதிர்த்து போராடவேண்டும். நீ எங்கிருந்தாலும் துணிவாக போராட வேண்டும். இராஜகோபாலனை போன்ற ஈனங்கெட்ட முதலாளிகளால், காமுகர்களால் நேற்று தலைவாசல் தங்கம்மா, பிஞ்சி மொட்டு ரீட்டா. . . இன்னமும் நமக்கு தெரியாமல் எத்துணை பேர்! இந்த கொடியவர்களின் பிடியில் சிக்கி தவிக்கின்றனரோ!

ஜோதி! ரீட்டா கதையை பார்த்தாயா? சிறுபிள்ளைதனமாக வீட்டில் கோபித்து கொண்டு வந்ததனால், வாழ்க்கையே நாசமாயிடுச்சு. ஆத்தூர் பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்த ரீட்டா, விபச்சார தொழில் விற்கப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டாள், சிறையதிகாரிகளின் காமவேட்டைக்கு இரையாக்கப்பட்டு, சின்னாபின்னமாக்கப்பட்டாள், பாதுகாப்பு தரவேண்டிய காவல்துறையே, பெண்ணை பாலியல் வன்முறை செய்தால், பெண்களுக்கு இந்த ஆணாதிக்க சமூகத்தில் பாதுகாப்பு ஏது? ரீட்டாவின் போட்டோவை பார்த்ததும் என்னை அறியாமலேயே, படபடவென கண்ணீர் வந்துவிட்டது. எவ்வளவு சிறு பிஞ்சு அது. நான் உள்ளுக்குள்ளேயே மிகவும் குமுறினேன். ரீட்டாவை போல எத்தனை இளம் பிஞ்சுகள் கல்கத்தா, மும்பாய் வீதிகளில் விற்கப்படுகின்றனர்!)

பெண்களின் உடலை சிதறடித்து வியாபாரமாக்கும் சமூகத்தை ஒழிக்க வேண்டும். அப்பாவி ஏழை பெண்களை, கருப்பாக இருந்தால் ரூ.7,500/– என்றும், சிவப்பாக இருந்தால் ரூ. 10,000/– என்று பெண்களுக்கு விலைபேசி விற்கும், இந்த நச்சு கும்பலை ஒழிக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

பாலியல் சுற்றுலா இன்னும் எந்தெந்த பெயரிலோ பெண்களின் உடல் வியாபாரமாக்கப்படுவதை, சூறையாடப்படுவதை ஒழிக்கப்பட வேண்டும். இந்தியாவில் விபச்சாரம் தடை செய்யப்பட போராட வேண்டும். ரீட்டா போன்ற பெண்களுக்கு இழிவு நேராமலிருக்க, சமூகத்தை மாற்றியமைக்க போராட வேண்டும்.

ஜோதி! இந்த சீர்கெட்ட சமூகத்தை மாற்றுவது, என்பது அத்துனை சுலபமல்ல. இதற்கு மிகவும் ஆழமான உறுதி, மக்களின் மீது அபார நம்பிக்கையும் வேண்டும். இந்த உறுதியான நம்பிக்கையுடன் எத்துணை கஷ்டங்களையும் துச்சமாக்கி இடைவிடாமல் போராடுவதால் மட்டுமே, சமூக மாற்றம் சாத்தியமாகும்.

நீ போராட வேண்டும், உன்னை போல, மற்றொரு ஜீவஜோதி உருவாகாமல் இருக்க நீ போராட வேண்டும். விசயம் பெரிதாகி விடக்கூடாது என்று போலி நாடகமாடி முழு பூசணிக்காயை சோற்றில் மறைத்து ஏமாற்றும் காவல்துறையை எதிர்த்தும், காம கயவர்களுக்கு துணை போகும் காமுகர்களை எதிர்த்துப்போராட வேண்டும்.

நீ ஒரு தனிமனிதனல்ல. உனது நியாயமான, போராட்டத்திற்கு தமிழக மக்கள் அனைவரின் ஆதரவும் உனக்கு உண்டு. காயமடைந்த மனதை தைரியமாக வைத்துக் கொள். நஷ்டஈடு வேண்டும் என்று கேட்காதே! கொடுத்தாலும் வாங்காதே! நியாயத்தை சவாலாக விடு! இன்னொரு பிரின்ஸ் சாந்தகுமார் பலியாகாமலிருக்க துணிவாக போராடு! ஆயிரமாயிரம் ரீட்டாக்களையும், தலைவாசல் தங்கம்மாக்கள், பத்மினிக்கள். . . அனைவரையும் உனது நெஞ்சில் பதிய வைத்துக் கொள்! உனது கோபக் கனல், காம வெறியர்களை சாம்பலாக்க வேண்டும். பெண்கள் அபலைகள் அல்ல, போராளிகள் என்று நிரூபிக்க வேண்டும். நீ ஒரு தனி மனிதனல்ல, மகாசக்தி என்று நிரூபிக்க வேண்டும்.

இறுதியாக, ஜோதி இதை எல்லாம் நான் ஏதோ வேகத்தில் எழுதுகின்றேன் என்று கருத வேண்டாம். கலங்கிய நெஞ்சுடன், குமுறுகின்றேன். நிதானமாகத்தான் எழுதுகிறேன். நான் உன்னை நேராக பார்க்கவில்லை, என்றாலும் கூட என் ஆதரவு உனக்கு எப்பொழுதும் உண்டு. நமது அனைத்து பிரச்சனைகளும் இந்த சமூக மாற்றத்தில்தான் தீரும், போராடும் மக்களுடன் இணைந்து, உறுதியாகப் போராடுவோம். . . உன்னை சந்திக்க ஆவலுடன்...

இப்படிக்கு
**வசுமதி**



படிப்பகம்

www.padippakam.com

# கவிதை கோப்பு

## புறப்பட்டார்கள்

மஞ்சள் வெயிலின்
மாலை வேளை
முடிந்தது வேளை
வெளியேறினாள்
மாணவி இராணி

பதின் மூன்று வயதே
நிரம்பிய
குழந்தை மனம்
மாறாதவள்

ஆரம்பமானது
இவளது பயணம்
வீட்டிற்கு
திருவிழா கூட்டத்தை யொத்த
மக்களை
சுமந்து செல்லும்
பேரூந்தில்

ஆம்!
இது அவளது
முதல் அனுபவம்
விரும்பினாள்
இறுதி அனுபவமாக
இருக்க....

சிங்கத்தின் வாயில்
அகப்பட்ட
சிறுமுயல் போல
ஓர் உணர்வு
இவளுக்குள்....

ஆரம்பமானது
நச்சுப் பாம்புகளின்
விடித் தாக்குதல்கள்

சல்லடை சல்லடையாக
துளைக்கப்பட்டது
இவளது நெஞ்சம்
சகிக்க முடியாத
கொச்சை வார்த்தைகளால்....

உயிரிழந்தார்கள்
எத்தனை எத்தனை
அழுதாக்கள்
இது போன்ற
நச்சுப் பாம்புகளினால்....

இனி உயிரிழக்க
மாட்டார்கள்

இதோ புறப்பட்டார்கள்
இராணி
போன்றவர்கள்
பெண்
போராளிகளாக!

இந்நச்சுப்
பாம்புகளை
பாலூட்டி
வளர்க்கும்
அரசாங்கத்தை
எதிர்த்து...



படிப்பகம்

www.padippakam.com

## எரிந்தது நெஞ்சம் :

செந்நீரால்
சிவந்தது
எங்கள் மண்

உணவானார்கள்
எங்கள் மக்கள்
மத வெறிப்பிடித்த
கழுகுகளுக்கும் பருந்துகளுக்கும்

மரத்துப் போனது
கத்தியும் வாளும்
மனித உடல்களை
கூறு போட்டதால்

உண்ட உணவு
செரிக்கும் முன்னமே
உயிர் எடுத்தார்கள்
நாய்கள்

தீப்பற்றியது
நெஞ்சில்
இதை நினைக்க
நினைக்க...

எரிந்தது
நெஞ்சம்
மட்டுமல்ல
மக்களும் தான்.

- தமிழ்மணி

## வயிற்று பசி :

எங்களுக்கோ
வயிற்று பசி
அவர்களுக்கோ
உடற்பசி

வயிற்று பசியை
சாதகமாக்கி
வென்றது
உடற்பசி

எங்களின்
வயிற்று பசியைத்
தீர்த்ததால்
நாங்கள் நாயைவிட
கேவலமாக
இச்சமூகத்தில்...

இக்காம வெறிப்
பிடித்த
இரத்தம் உறிஞ்சும்
ஆந்தைகளோ...
வலம் வருகின்றனர்
உயர் நிலையில்...

என்று மாறும்
இந்த நிலை
என்று தீரும்
இத்துயரம்.

- தமிழ்மணி



படிப்பகம்

www.padippakam.com

## நீர் சுமக்கும் பெண்கள் :

**கா**ர்க் கருமை செறிந்த ஆற்றங்கரையிலிருந்து
சமையலறைப்புகை விரவிய நீரும் சாலை நோக்கி
நீர் சுமக்கும் பெண்களின் நீண்ட வரிசை
சாலையைப் போலவே ஒழுங்கற்றதாய்

இருந்துகொண்டே இருக்கிறது பழங்காலம்முதல்

பெண்களின் லேசாகக் கூனிய முதுகுகளின்மேல்
கருநிறச் சிலைகள் போல் மரப்பீப்பாய்கள்
பொன்னிற நீரை
அவர்களின் பொன் இதயங்களில் தெளித்தபடி

இருந்துகொண்டே இருக்கிறது பழங்காலம் முதல்

உண்மை
மனிமலைகளின் தேவதையால் ஆதரிக்கப்படும் புல்வெளி
தாராளமானது
பெண்களின் இதயங்களும்கூட தாராளமானவை
கனத்த சுமைகளை முதுகில் சுமந்து
தங்களை வழிபடுவோர் நெருங்குவதை
நெருப்புக்குப் பின்னிருந்து

அதே கொடிய பார்வைகளால் கண்காணித்த
வில்லையும் அம்பையும் கைகளிலேந்திய
அந்தத் திடமான பழங்குடி மனிதர்களின்
இதயத்தில் இருந்தினரா

அன்பு நிறைந்த ஒரு தாய்
ஒரு மனைவி
அல்லது ஒரு மகள்?

எந்நேரமும் ஒலிக்கும் வெள்ளிமணிகள்
இருந்துகொண்டே இருக்கின்றன பழங்காலம்முதல்

- கல்பனா

நன்றி. சீனத்துக் கவிதைகள்



படிப்பகம்

www.padippakam.com

# புரட்சியையே உயிர்மூச்சாக்கிய க்யுஜின்



சீன தேசிய விடுதலை போராட்டத்தில் துவக்க வருடங்களில் சீனாவில் உள்ள நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களில் பங்கெடுத்து மிகவும் வீரமாக போராடிய போராளி கியுஜின். சிங் அரசாங்கத்திற்கு எதிராக போராடிய இவர் 31–ம் வயதில் 1907–ல் தன்னுடைய பிறப்பிடமான 'பெஜியாங்' மாநிலத்தில் உள்ள ஷாவோகிங்கில் தியாகி ஆனார்.

மேல்தட்டு அறிவாளி வர்க்கத்தை சார்ந்த கியுஜின் படிப்பதற்கும், கவிதைகள் எழுதுவதற்கும் சிறு வயதிலிருந்தே பெற்றோர்களால் மிகவும் உற்சாகமூட்டப்பட்டார். உடல் வலிமையின் தேவையை அறிந்த கியுஜின் சிறுவயதிலிருந்தே யுத்த கல்வி கற்றுக்கொள்ள பிரியப்பட்டார். ஆனால், அவரின் தாத்தா தான் செய்த வேலையை விட்டுவிட்டு ஷாவோகிங் நகரத்திற்கு வீட்டை மாற்றும் வரையில் அவருக்கு யுத்த கல்வி கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. 16 வயதில் குதிரை சவாரி, குத்துச் சண்டை, கத்திக் கல்வி கற்றுக் கொண்டார். 19 வயதில் ஹினான் நகரத்தை சேர்ந்த பணக்கார வியாபாரியான 'வாங்' குடன் திருமணம் நடந்தது. பீஜிங்கில் அவருக்கு அரசு வேலை கிடைத்த பிறகு கியுஜின் கூட அவருடன் பீஜிங் சென்றுவிட்டார்.

1894–95 காலகட்டத்தில் சீனா–ஜப்பான் யுத்தம் முடிவுற்ற காலம். சிங் சாம்ராஜ்யத்திற்கு எதிராகவும், நாட்டு பற்றுடன் பல கட்டுரைகள் பத்திரிகைகளில் விரிவாக பிரசுரிக்கப்பட்டன. சீனாவை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற ஏகாதிபத்தியவாதிகளின் உத்திகளை எதிர்த்து இவை தொடரப்பட்டன. இவைகளின் தாக்கத்தால் கியுஜின் இதுபோன்ற கட்டுரைகளை அவ்வப்போது படிப்பது மட்டுமல்லாமல் அதே கருத்துக்கள் இருக்கின்ற நபர்களுடன் அறிமுகங்களை வளர்த்துக் கொண்டு இவ்விஷயங்களைப் பற்றி விவாதங்கள் நடத்துவார். 1900–ல் பக்சார் யுத்தத்துடன் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் துவங்கியதென்று கூறலாம். எட்டு ஏகாதிபத்திய நாடுகள் சேர்ந்து பக்சார் யுத்தத்தை அடக்குவதற்கு பீஜிங்கை



படிப்பகம்

www.padippakam.com

ஆக்கிரமித்தன. சிங் அரசு சமரசம் செய்துக் கொண்டது. சீன மக்களின் மீது ஏகாதிபத்தியவாதிகளின் தாக்குதல், சுரண்டல், கொடூரமான கொலை போன்றவற்றை நேரடியாக கண்ட கியுஜின் குமுறினார். இச்சம்பவங்கள், கியுஜினின் நாட்டுபற்றை மேலும் அதிகரிக்க செய்தன. அதிலிருந்து அவர் புரட்சிகர நிகழ்ச்சிகளில் பங்கெடுக்க தொடங்கினார். அப்பொழுதுதான் பெண் உரிமைக்கான போராட்டங்கள் பற்றி அவரின் கண்ணோட்டம் உறுதி அடைந்தது. "பெண்களுக்கு கல்வி கொடுக்காமல் ஒரு நாட்டை உறுதியாக்க முடியாது. பெண்களுக்கு உரிமைகள் இல்லை என்றால் நம் நாடு பலவீனமாகிவிடும்" என்று அவர் கருதினார். அக்கருத்துக்களை பிரச்சாரம் செய்தார். பெண்கள் தங்களின் அறிவுத்திறனை வளர்த்துகொள்ள வேண்டும் என்றும், சுதந்திரமாக இருக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு விஷயத்திற்கும் ஆண்களை சார்ந்து நிற்க கூடாது என்று விரும்புவார். பெண்களின் மீதான அனைத்து வகையான நிலபிரபுத்துவ சம்பிரதாயங்களையும் கட்டுபாடுகளையும் எதிர்த்தார். அந்த காலகட்டத்தில் தான் தன்னுடைய கருத்துக்களை வெளிப்படுத்தி புரட்சி கவிதைகள் எழுதினார்.

'பெண்களுக்கு சம உரிமை' என்ற முழக்கத்தை சீனாவில் முதன்முதலாக முன் கொண்டு வந்தது கியுஜின் தான். புரட்சிகர கருத்துக்களின்பால், மிகுந்த ஈடுபாடு கொண்ட கியுஜின், 'ஒரு அரசாங்க அதிகாரியின் மனைவி'யாக உல்லாச வாழ்க்கை வாழ்வதில் வெறுப்படைந்தார்.

இக்கட்டத்தில் சீனாவை ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து காப்பாற்ற வேண்டும் என்றும், அதற்காக மேற்கு நாடுகளிலிருந்து முக்கியமாக ஜப்பானிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனைகள், புரட்சிகர கருத்துக்கள் முதலாளிய ஜனநாயகவாதிகளின் மத்தியில் அதிகமாக இருந்தன. கியுஜின் கூட ஜப்பானில் படிக்க வேண்டும் என்று பலமுறை சிந்தித்தார். கியுஜின் கணவருடன் வேலை செய்கின்ற மற்றொரு அரசாங்க ஊழியரின் மனைவி 'உ' இவர் முற்போக்கு சிந்தனைகள் கொண்டவர். இவர் கியிஜினுக்கு நல்ல தோழி. இவரும் கவிதை எழுதுவார். இவர்கள் இருவரும் சேர்ந்து அடிக்கடி கவிதைகள் எழுதி, பல விவாதங்கள் நடத்துவர். 'உ' உதவியுடன் கியுஜின் தனது நகைகளை விற்று ஜப்பான் போக ஏற்பாடு செய்தார்.

1904–ல் கியுஜின் தனது கணவரை விவாகரத்து செய்துவிட்டு, ஜப்பானுக்கு சென்றுவிட்டார். அங்கு சென்ற உடனே ஜப்பானில் இருந்த சீன புரட்சியாளர்களை சந்தித்தார். ஜப்பானில் படிக்கின்ற சீன மாணவர்கள் மிக சுறுசுறுப்பாக புரட்சிகர நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார். அவர்கள் அவ்வப்போது ஒன்றிணைந்து கூட்டங்கள் நடத்தி விவாதிப்பார்கள். கியுஜின் இதுபோன்ற கூட்டங்களுக்கு தவறாமல் போவார். அதுமட்டுமல்லாமல் அவர் ஒரு அற்புதமான மேடை பேச்சாளர்கூட. சீன மாணவர்களில் பெண்கள் இருப்பதே மிக குறைவு. அதில் பேச்சாளர்கள் இன்னும் குறைவானவர்களே.

1905–ம் ஆண்டு ஜீலை மாதத்தில் சன்யாட்சென் பல முதலாளிய புரட்சிகர குழுக்களை ஒன்றிணைத்து 'சீன புரட்சி ட்ரஸ்டு' ஒன்றை (டுங் மெங் ஹீயி) ஏற்படுத்தினார். அந்த ட்ரஸ்டில் முதலில் சேர்ந்தவர்களில் கியுஜினும் ஒருவர். பிறகு



படிப்பகம்

www.padippakam.com

அவர் தனது சொந்த மாநிலத்தில் இந்த ட்ரஸ்ட்க்கு ஒரு கிளையை ஏற்படுத்தினார். அதற்கு பிறகு பெஜியாங் மாநிலத்தில் உள்ள உறுப்பினர்கள் இந்த விஷயத்தில் கியுஜின் வழியை கடைபிடித்தனர்.

டுங் மெங் ஹீயி உருவானபின் புரட்சிகர நிகழ்ச்சிகள் அதிகரித்தன. இதை கண்ட சிங் அரசு அதிர்ச்சியடைந்தது. உடனே ஜப்பான் அரசு உதவியுடன் சீன மாணவர்களின் மீது அதிக அழுத்தத்தை கொண்டு வந்தது. இதனால் கியுஜின் தவிர்க்க முடியாமல் சீனாவிற்கு வந்துவிட்டார். அவர் சீனாவிற்கு வந்த பிறகு ஜப்பானில் உள்ள தனது தோழர்களுக்கு எழுதிய கடிதத்தில் தனது வாழ்க்கை முழுவதும் புரட்சிக்காகவே வேலை செய்வேன் என்றும், மீண்டும் அனைவரும் தாய் நாட்டிலேயே சந்திப்போம் என்றும், வேலை செய்யும் தருணத்தில் ஒருவேளை தான் இறந்துவிட்டாலும் புரட்சிக்காக உயிர் நீத்ததற்காக என்றும் வருத்தப்பட மாட்டேன் என்றும் எழுதினார்.

கியுஜின் ஷாங்காய் சென்று அங்கு இன்னும் சில தோழர்களுடன் சீன அகாடெமியை நிறுவினார். இது ஜப்பானிலிருந்து திரும்பிய மாணவர்களுக்கு ஆசிரியர்களாக வேலை செய்யும் வாய்ப்பை கொடுப்பதற்காக துவங்கப்பட்டது போல் வெளியில் உள்ளவர்களுக்கு தோற்றமளித்தது. ஆனால், யதார்த்தத்தில் புரட்சியாளர்களுக்கு அதுவே மய்யமாக இருந்தது. யாங்சி நதிகரையில் இருந்த பல இரகசிய குழுக்களுடன், திரைமறைவு அமைப்புகளுடன் இந்த அகாடெமி இரகசிய உறவுகளை மேற்கொண்டு வந்தது. அதுமட்டுமல்லாமல், ஆயுத போராட்டத்திற்கு தேவையான வெடிகுண்டுகள் தயாராவது இங்குதான்.

கியுஜின் ஷாங்காயில் ஒரு பெண்கள் பத்திரிகையை துவங்கினார். (சைனிஸ் வுமன் ஜர்னல்) சீன பெண்கள் ஜனநாயக புரட்சியில் பங்கெடுப்பதற்கும், உற்சாகமூட்டுவதற்கும் இவர் இந்த பத்திரிகையை துவங்கினார் "பெண்கள் அறிவுத்திறனை பெறுவதற்கும், சீனா பெண்கள் அமைப்பு கட்டும் இலட்சியத்துடனும், ஒன்றுபட்டு வேலை செய்வதற்கு உறுதியான குழுக்கள் உருவாவதற்கு, சமூகத்தில் ஒரு நல்ல சூழலை உருவாக்குவதே தனது இலட்சியம்" என்று இந்த பத்திரிகை அறிவித்தது. இப்பத்திரிகையின் முதல் பிரதி 1907 ஜனவரி 1 அன்று வெளியிடப்பட்டது. இதில் வியாபார அறிவிப்புகளோ, அரசாங்க அறிவிப்புகளோ இல்லாமல் வெளியிடப்பட்டது. அதில் ஒரு முக்கியமான கட்டுரை 'சகோதர பெண்களுக்கு ஒரு மடல்' இந்த மடலில் ஒரு பகுதியில் – எனது அன்பான சகோதர பெண்களே, இன்று நமது நாட்டில் உள்ள இருநூறு மில்லியன் ஆண்கள் நாகரீக உலகத்திற்கு வருகின்றனர். ஆனால் நம்மை இருநூறு மில்லியன் பெண்களை மட்டும் இன்னும் இருட்டு குகையிலேயே வைத்திருக்கிறார்கள். அவற்றிலிருந்து நாம் வெளிவரமுடியவில்லை. நமது பாதங்கள் அழகாக இருப்பதற்காக இறுக கட்டிக்கொள்கின்றோம். கூந்தலுக்கு வகைவகையான வண்ணங்களை போடுகின்றோம். பூ நகைகளுடனும், அழகான பட்டு துணிகளுடனும், நமது உடலை அலங்காரம் செய்து கொள்கின்றோம். நமது முகத்திற்கு பௌடர் பூசி கொள்கின்றோம். நமது வாழ்க்கையில் ஒவ்வொரு விஷயத்திற்கும் ஆண்களை சார்ந்திருக்கிறோம். நாம் மற்றவர்களை நம் பால் ஈர்க்க வேண்டும் என்றும்,



படிப்பகம்

www.padippakam.com

அவமானங்களை தாங்கி வாழ்க்கை முழுவதும் மௌனமாக அழுது எருமைமாடு போன்று வேலை செய்து கொண்டு வாழ்க்கை முழுவதும் கைதிகளாகவே இருக்கின்றோம். எனது அன்பு பெண்களே! உங்களுடைய வாழ்க்கையில் எப்பொழுதாவது சுதந்திரமான மனிதர்களாக சந்தோஷத்தை அனுபவித்துள்ளீர்களா? என்று எழுதினார்.

இக்கட்டுரையில் பெண்களின் அப்போதைய வாழ்க்கை நிலைமை பற்றி எழுதிய பிறகு "பெண்களும் ஆண்களும் சமம் என்ற அடிப்படையில் வாழ்வதற்கு" தங்களின் நிலவுடமை குடும்பங்களை உடைத்தெறிந்து படிக்க வேண்டும் என்றும், வேலை செய்ய வேண்டும் என்றும், சுதந்திரமாக வாழ வேண்டும் என்றும் அறை கூவல்விடுத்தார். பெண்கள் பொருளாதார சுதந்திரம் அடையாமல், தங்களின் விடுதலை பற்றி சிந்திக்க இயலாது என்று அழுத்தமாக கூறினார்.

பத்திரிகையில் உள்ள கட்டுரைகள் மிகவும் பிரபலமாகிவிட்டன. படிக்க தெரிந்தவர்கள் படித்து விவாதித்தனர். படிக்க தெரியாதவர்கள் மற்றவர்களை படிக்க சொல்லி கேட்பார்கள். பல பெண்கள் தங்களுக்கு ஆதரவு கிடைத்ததென மகிழ்ச்சியடைந்தனர். ஆனால், மாத இதழாக துவங்கப்பட்ட இப்பத்திரிகை இரண்டே இதழ்கள் வெளியிடப்பட்டன. இந்த இதழில் தலையங்கம், பிழைதிருத்தம், விநியோகிப்பது போன்ற அனைத்து பொறுப்புகளையும் கியுஜின் சுயமாக பார்த்தார். எல்லோருக்கும் புரியும் மொழியில் அவர் கட்டுரைகள் எழுதினார். புரட்சிகர சித்தாந்தங்களை பிரச்சாரம் செய்வதற்கு நாட்டுபுற பாடல், ஆடல் மற்றும் பல கலை வடிவங்களை பயன்படுத்தினார்.

1906–ல் பல நகரங்களில் எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் ஆயுத கலகம் நடத்த திட்டமிடுவதற்காக ஷாங்காயில் புரட்சியாளர்கள் கூட்டம் போட்டனர். ஹுவான் மாநிலத்தில் லியுயாங், ஜியாங்சி மாநிலத்திலுள்ள பிங்ஜியாங் பகுதிகளை அடித்தளங்களாக கொண்டு, மீதி நகரங்களை ஆதரவாக்க திட்டமிட்டனர். பெஜியாங் மாநிலத்தில் அதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யலாம் என்று கியுஜின் கூறினார். இதன் பகுதியாக கியுஜின் தனது சொந்த ஊரான ஷாவோகிங்–ல் டாடாங் பள்ளி கூடத்திற்கு தலைமை ஆசிரியராக வந்து சேர்ந்தார். அந்த பள்ளிக்கூடமும் திரைமறைவு வேலைக்காக ஏற்பாடு செய்யப்பட்டதுதான். உண்மையில் இது இரகசிய அமைப்புகள் இணையும் கூட்டத்திற்கான இடமாக பயன்பட்டது. ஹுனானில் ஆயுத எதிர்ப்பு துவங்கிய உடனே பெஜியாங்கில் கூட அதன் தொடர்ச்சியாக ஆயுத எதிர்ப்பு இருக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், அந்த திட்டம் தோல்வி அடைந்து பல புரட்சியாளர்கள் கொள்ளப்பட்டனர். ஹுனானில் தோல்வி அடைந்தாலும் பெஜியாங்கில் புரட்சிகர நடவடிக்கைகளை துரிதப்படுத்தி இன்னும் பலமான புரட்சிகர இயக்கத்தை கட்டவேண்டும் என்று கியுஜின் மற்றும் அவரின் சக தோழர்களும் முடிவு செய்தனர்.

கியுஜின் டாடாங் பள்ளிகூடத்திலிருந்து பட்ட படிப்பு முடித்த மாணவர்களை புரட்சிகர சித்தாந்தத்தை பிரச்சாரம் செய்வதற்கு அவரவர்களின் சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தார். கியுஜின் இரகசிய அமைப்புகள் அனைத்தையும் எட்டு இராணுவ



படிப்பகம்

www.padippakam.com

பகுதிகளாக கட்டினார். இந்த இராணுவத்தை அவர்கள் 'மறுகட்டமைப்பு இராணுவமாக' அழைத்தனர். இந்த இராணுவத்திற்கு சூக்சிலின் கமாண்டராகவும், கியுஜின் துணை கமாண்டராகவும் நியமிக்கப்பட்டனர். 1907 ஜூனில் இந்த எட்டு துறைகளின் கமாண்டர்களும், கியுஜினும், சூக்சிலியனும் சேர்ந்து மற்றொரு ஆயுத நடவடிக்கைக்கு திட்டம் தீட்டினார். இந்தமுறை பெஜியாங்கில் ஜின்ஹீவா, சுஜௌ ஆகியவற்றை மையமாகக் கொண்டு ஆயுத நடவடிக்கை இருக்க வேண்டும் என்று முடிவு செய்தனர். சிங் இராணுவம் வந்த உடனே தலைநகரமான 'ஹாங் ஜௌ'ல் ஆயுத நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது திட்டம். அதே மாதத்தில் ஆன்ஹீயி மாநிலத்தில் சூக்சிலியன் ஆயுத நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்தனர். ஆனால் சிங் அரசாங்கத்திற்கு இத்தகவல் தெரிந்து முன்னெச்சரிக்கையாக இருந்துக்கொண்டது. அதனால் ஏற்பாடுகளை முடிப்பதற்கு முன்பே ஆயுத நடவடிக்கை செய்ய வேண்டிய நிலைமை வந்தது. இறுதியில் க்சுசூக்சிலியன் கொடூர அரசால் கொள்ளப்பட்டார்.

அவரின் மரணத்தால் கியுஜின் அதிர்ச்சியடைந்தார். பெஜியாங் மாநிலத்தில் ஏற்கனவே திட்டமிட்டபடி எல்லாவற்றையும் தயார் செய்து கொண்டு ஜூன் 19–ம் தேதி அன்று இரகசியமாக க்சுசூக்சிலியன் நினைவு கூட்டம் நடத்தி ஷாவோஜிங்கை கைப்பற்ற வேண்டும் என்றும் திட்டம் தீட்டினார். அதே நாள் தன்னுடைய தோழிக்கு எழுதிய கடிதத்தில் தான் புரட்சியின் வெற்றிக்காகவே தனது உயிரை விடுவேனென்று எழுதியிருந்தார். அதில் இன்னும். . .

என் நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் துன்பத்தில் இருக்கின்றனர். நாடு மிகப் பெரிய ஆபத்தை எதிர்கொள்ள போகிறது. நான் இனி எனது இறுதி கட்டத்திற்கு சென்று விட்டேன். இப்பொழுது வருத்தப்படுவதால் எப்பயனும் இல்லை. இந்த பாழடைந்த பூமியில் என்னை யார் புதைத்து விடுவார்? சீனா முழுவதும் பாழடைந்துவிட்டது. ஆகையால் எனக்காக சமாதி கட்ட வேண்டியதில்லை. பைரன் கவிதைகளை படித்து வேறு சூழலில் சந்தோசப்படலாம். ஆனால், இன்று எனக்கு முக்கயமான கடமை இருக்கிறது. எனது நாட்டைக் காக்க உயிர் கொடுப்பது என்ற முக்கியமான கடமை. எனது நாட்டிற்காக உயிரை கொடுத்து நான் எப்பொழுதும் வாழ்ந்து கொண்டே இருப்பேன். நன்றி! என்று எழுதினார்.

ஜூலை 12–ம் தேதி அன்று கியுஜின்னுக்கு, சிங் அரசாங்க இராணுவத்தினர் சிலர் டாடாங் பள்ளிகூடத்தின் மீது தாக்குதல் நடத்த வந்துள்ளதாக இரகசிய செய்தி கிடைத்தது. அதே நேரத்தில், ஜின் ஹவா, சு ஜௌவில் உள்ள புரட்சியாளர்கள் தங்களின் போராட்டத்தில் தோல்வி அடைந்தாரென்ற செய்தியும் வந்தது.

ஷாவோஜிங் முற்றுகை பற்றியான கியுஜின் திட்டம் எதிரிக்கு தெரிந்தது. நீய் என்ற புரட்சியாளனின் வீட்டை சோதனையிடும் பொழுது பெரியளவில் பேனர்களும், அறிக்கைகளும், மற்ற புரட்சியாளர்களுக்கு சம்பந்தப்பட்ட முக்கியமான செய்திகளும் நிறைய கிடைத்தன. அத்துடன் நாடு முழுவதும் பெரிய இழப்பு நடந்தது.



படிப்பகம்

www.padippakam.com

இவை அனைத்தும் சேர்ந்து ஜூலை 19 அன்று ஆயுத நடவடிக்கை செய்யும் வாய்ப்புகள் இன்னும் இல்லாமல் போய்விட்டன. டாடாங் பற்றி கூட எதிரிக்கு தெரிந்துவிட்டதால் கியுஜினும் பள்ளிகூட மாணவர்களும் தற்காலிகமாக ஷாவோஜிங்கை விட்டு போகவேண்டும் என்றும் முடிவு செய்தனர். போவதற்கு தயாராகும்பொழுதே திடீரென துப்பாக்கி குண்டுகள் பொழிந்தன. தாங்களும் தப்பமுடியாதென புரிந்துகொண்ட கியுஜின் திருப்பி சுட அனுமதி கொடுத்தார். ஒரு மணி நேர துப்பாக்கி சூட்டிற்கு பிறகு சிங் இராணுவம் வளாகத்தை சுற்றி வளைத்தது. மிகவும் வீரமாக போராடுகின்ற கியுஜினை பின்புறத்திலிருந்து தாக்கி பிடித்தனர். இவர் பிடிபட்ட மூன்றாவது நாள் ஷாவோகிங்கில் உள்ள ஒரு பிரதான தெருவில் தூக்கிலிட்டனர். அவரின் தோழி 'உ' சக தோழர்களின் உதவியுடன் இரகசியமாக இவரின் உடலை கொண்டு சென்று ஹாங் ஜௌவில் இறுதி சடங்கு நடத்தினர்.

கியுஜின் தூக்கிலிடப்படுவதை எதிர்த்து நாடு முழுவதும் பல எதிர்ப்பு போராட்டங்கள் வெடித்தன. பத்திரிகைகளில் தனிநபர் பெயரிலும், அமைப்புகள் பெயரிலும் கவிதைகள் கட்டுரைகள் அளவில்லாமல் பிரசுரிக்கப்பட்டன. இவரின் சக தோழர்கள் அவரின் இலட்சியத்தை நிறைவேற்றுவோம் என சபதமேற்றனர். சீன பெண்களின் இலட்சியத்திற்காகவும், புரட்சியின் வெற்றிக்காகவும் தனது வாழ்க்கையை அர்பணித்த கியுஜின் சீன மக்களின் இதயங்களில் என்றென்றும் இடம் பெற்றார்.

*(கியுஜின் வாழ்க்கை கதையை புரட்சிக்கு பிறகு 'தி ரிவல்யூஷனரி' என்ற பெயரில் சினிமா எடுத்தனர். இந்த படத்திற்கு க்சீஜின் இயக்குநர்)*

# எதிரொலிப்பு

நண்பர்களே! இன்றைய பிற்போக்கு சீரழிவு சமூகத்தில் பெண்ணாகப் பிறக்கும் ஒவ்வொருவரும் பல பிரச்சினைகளை எதிர்கொள்வது என்பது தினசரி நிகழ்ச்சியாகி விட்டது! தாங்கள் சந்தித்த பிரச்சினைகளை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று பலமுறை நினைத்திருக்கலாம். ஆனால் பல சமயங்கள் பகிர்ந்துக்கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்காமல், மனதிற்குள்ளேயே புழுங்கிக்கொண்டு அவதிப்பட வேண்டியிருக்கும். ஆனால் தாங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளையும், அதை தீர்க்க மேற்கொண்ட வழிகளையும் பகிர்ந்துக்கொள்ளும், உங்களுக்கான காலம்தான் எதிரொலிப்பு காலம்! உங்களுக்கான இந்த காலத்தில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்யும் அர்ச்சனா என்பவரின் அனுபவ பகிர்வு இங்கு வெளியிடப்படுகிறது.

— ஆசிரியர்

என் பெயர் அர்ச்சனா. நான் ஒரு தனியார் துறையில் உள்ள துண்டு தைக்கும் நிறுவனத்தில் பணிபுரிகின்றேன். முதலாளி வர்க்கங்கள் தன்னுடைய லாப வேட்டைக்காக தங்கள் நிறுவனங்களில் பணிபுரியும் பெண்களை



படிப்பகம்

www.padippakam.com

எவ்வாறெல்லாம் உழைப்புச் சுரண்டலில் ஈடுபடுத்துகின்றனர் என்பதை அந்நிறுவனத்தில் நான் வேலைக்கு சேர்ந்த பிறகுதான் தெரிந்தது. பெண்கள் சமூக உற்பத்தியில் ஈடுபடுவதற்காக வேலைக்கு சென்றாலும் கூட அங்கு அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் இன்னும் கொடூரமாகவே உள்ளது. இந்நிறுவனத்திற்கு காலை 9.00 மணிக்கு வரவேண்டும். பின்பு இரவு 10.30 மணிக்கு மேல் தான் வீட்டிற்கு செல்ல வேண்டும். மதிய சாப்பாட்டு இடைவெளி 1/2 மணி நேரம் மட்டும் தான். இதில் சிறிது நேரம் ஓய்வு கூட கிடையாது. அவ்வாறு அவர்கள் ஓய்வு எடுக்க நினைத்தாலும் அதற்கு அனுமதி கிடையாது.

இதன் காரணமாக தொழில் கூடங்கள் சித்திரவதை கூடங்களாக மாற்றப்பட்டு வருகின்றது. இவர்கள் துண்டுகள் தைய்க்கும் போது தைய்ப்பதில் தவறு இருந்தால் காதுகளில் கேட்கக் கூடாத அளவுக்கு மனதை உருக்குலைக்கும் வார்த்தைகள் தான் அநேகம். இதில் பணிபுரிவதற்காக இவர்கள் ஒரு நாளைக்குப் பெரும் சம்பளம் ரூ.30/– இவ்வாறு பெறும் சம்பளத்தைக் கொண்டு அன்று அவர்கள் இழந்த சக்தியை மட்டும் தான் திரும்ப பெற முடியும்.

காலை 9.00 மணியில் இருந்து இரவு 10.30 மணிவரை கட்டாயமாக வேலை பார்த்தாக வேண்டும். அவ்வாறு அவர்கள் வேலை பார்க்கத் தயாராக இல்லாமல் இருந்தால் அவர்களை பணி நீக்கம் செய்து விடுகின்றனர். வறுமையின் காரணமாக இவர்கள் குறைந்த சம்பளத்திற்கு நீண்ட நேரம் வேலைப் பார்த்து தான் ஆக வேண்டும் என்ற கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

அவர்களை எதிர்த்து எந்த கேள்வியும் கேட்கமுடியாத நிலையில் தொழிலாளர்கள் வாய் அடைத்துள்ளனர்.

காலை முதல் மாலை வரை சுகாதாரமற்ற சூழ்நிலையில் பணிபுரிந்து தன் வியர்வையையும் இரத்தத் துளிகளாக வெளியேற்றி விட்டுவரும் இவர்களை இந்த ஆணாதிக்க சிந்தனையாளர்கள் வீட்டு வேலைகளையும் சேர்த்து சுமக்க வைத்து ஒரு அடிமாட்டைவிட கேவலமாக நடத்தும் சூழ்நிலை நிலவி வருகின்றன.

சோகங்கள் வறுமையில்
வாய் அடைத்துள்ளது
வாய் திறந்தால்
பட்டினியின் உச்சக்கட்டம்...

முதலாளிகளின் அகோர முகங்களினால்
தூண்டில் புழுக்களாய் நெளிகின்றனர்
சந்தோசங்களை தூக்கிலிட்டு
மூட்டை பூச்சிகளுக்கும் கொசுக்களுக்கும்
உடல் குருதியை விற்றுவிட்டு
கிழிந்த போர்வைகளோடு
சரீரத்தின் களைப்பை தீர்க்கின்றனர்!
இம்மக்களின் துயரங்களோ!
லாப வேட்டைகளுக்கு உல்லாச ஊர்வலம்
உடமைகளை பொது வாக்குங்கள்
அன்று தீரும் எங்கள் தாகங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# அற்பணிப்பு

"வேலைக்கு போற பொம்பளைகளுக்கு அதிர்ஷ்டம்தான்!"
"ஏன். . .!"
"வேலைக்கு போறது என்ற பெயர்ல வீட்டு வேலையும் சரியா செய்ய மாட்டாங்க. . . இங்கு ஆபிஸ் வேலையும் சரியா செய்ய மாட்டாங்க. . ."
"எதனால?"
"பஸ் கிடைக்கலைன்னு ஒரு மணி நேரம் லேட்டா வந்தாலும் அவங்களை யாரும் கேட்க மாட்டாங்க. . ."
"ஆமாம்"
"விருந்தாளிங்க வந்தாங்களோ, பசங்களை ஸ்கூலிலிருந்து கூட்டிட்டு வரணும்னா. . . ஒரு மணி நேரம் முன்னாடி போனும்னா பர்மிஷன் கிடைக்கறது, அவங்களுக்குத்தான்!"
"உண்மை தாங்க!"
"இன்றும் வீட்டு பிரச்சனைகளால ஆபிஸ் வேலையக்கூட சரியா செய்ய மாட்டாங்க"
"ஆமாம்"
"பூஜை, விசேஷமுன்னு. . . ஆபிஸ்ல வேலை செய்யாமல் உக்காருவாங்க"
"சரிதான்!"
"சமையல் வேலை செய்யற பொம்பளைங்களுக்கு ஆபிஸ் வேலை எப்படி வரும் சொல்லுங்க"
"ஆமாம்! அப்ப உங்க செக்ஷன்ல வேலை எல்லாம் ஆண்கள் தானோ! நீங்க செய்யலண்ணா வேலை அப்படியே, இருந்திடுமோ?"
"ச்சச். . . எங்க செக்ஷன்ல பெண்டிங் வேலை எப்போமே இருக்காது. சீக்கிரமா, சிறப்பான வேலை எங்கேன்னு கேட்டா, எங்க செக்ஷன் தான்னு பெயரிருக்கு ஆமா! அவசரமா மத்தியத்துக்கு முடிக்க வேண்டிய வேலை நிறைய இருக்குனு சொன்னே? பார்த்தா காலையிலிருந்து கேன்னடீன்லையும், அங்கே, இங்கே இருக்கே? வேலை முடிக்கலே?"
"ஆ... அந்த வேலை இந்நேரம் எங்க நண்பர்கள் முடிச்சிருப்பாங்க. எங்க செக்ஷன்ல ஒருத்தருக்கொருத்தர் உதவி செஞ்சிக்கரது சகஜம் தான்."
"ஆமாம்! தேவைன்னா இப்படி ஒருத்தருக்கொருத்தர் வேலையில உதவி செஞ்சிகணும்தான்"
"எங்க ஆபிசருக்கு கூட எங்க செக்ஷன்ல எவ்வளவோ மரியாதை"
"உங்க செக்ஷன்ல மொத்தம் எவ்வளவு பேர்"
"ஆறு பேர்"
"எல்லாருமே ஆண்கள் தானே!"
"இல்ல! நாமட்டுந்தா!"



படிப்பகம்

www.padippakam.com

# தெலங்கானா இயக்கத்தில் பெண்கள்

1949–50 காலக் கட்டத்தில் இந்திய கம்யூனிச கட்சி வீரஞ் செறிந்த தெலுங்கானா இயக்கத்திற்கு தலைமை கொடுக்க மறுத்துவிட்டது. சந்தர்ப்ப வாதத்தால் மூழ்கி திளைத்த இந்திய கம்யூனிச கட்சி (சி.பி.ஐ) போர்க் குணம் மிக்க போராட்டங்களுக்கு தலைமை தாங்க மறுத்துவிட்டு பாராளுமன்றத்திற்குள் சரணடைந்தது.

ஆனால் இக்கால கட்டத்தில் தெலுங்கானா போராட்டத்தில் பலர் போராளிகள் வீரஞ் செறிந்த பங்காற்றி உயிரிழந்துள்ளனர். பெண்களும் போர்க் குணமிக்க போராட்டங்களுக்கு தலைமை தாங்கியுள்ளனர். பெண்களின் இந்த போர்க்குணம் மிக்க போராட்டங்களை சுந்தரய்யா, "வீரத் தெலுங்கானா" புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளதை இங்கு வெளியிடுகிறோம்.

– ஆசிரியர்

தெலங்கானாப் போராட்டத்தில் பெண்கள் முக்கியப் பங்கு வகித்தார்கள். நிலத்துக்கான இயக்கத்திலும், விவசாயத் தொழிலாளர்களின் கூலிப் போராட்டங்களிலும், நிலப்பிரபுகளின் தானியங்களைக் கைப்பற்றுவதிலும், கோயா, செஞ்சு, லம்பாடி மக்களை வனப் பகுதிகளில் இருந்த அவர்களது கிராமங்களிலிருந்து, அல்லது சமவெளிகளில் சிதறிக் கிடந்த அவர்களது கிராமங்களிலிருந்து வெளியேற்றும் "பிரிக்ஸ் திட்டத்துக்கு" எதிரான போராட்டத்திலும் தீவிரப் பங்காற்றினார்கள். ரஜாக்கர்களையும், நேரு, இராணுவம்–போலீசையும் எதிர்த்துப் போராடுவதிலும் தமது கணவன்மார்களோடும் உடன்பிறந்தாரோடும் சேர்ந்து நின்றார்கள். படைக் குழுக்களிலும் அரசியல் குழுக்களிலும் சேர்ந்து, காடு–மலை–வயல்களிலும், மழை வெயிலிலும், இன்ப துன்பங்கள் யாவற்றையும் பகிர்ந்து கொண்டார்கள். தகவல்–ஊழியர்களாகவும், அரசியல் பிரச்சாரகர்களாகவும், புதிய மையங்களில் மக்கள்–இயக்கங்கள், வெகுஜன ஸ்தாபனங்களின் அமைப்பாளர்களாகவும் செயல்பட்டார்கள்.

ரஜாக்கர்களும், நிஜாமினதும் நேருவினதும் போலீசும் இராணுவமும் இழைத்த மிருகத்தனமாக சித்தரவதையிலும் கொடிய அட்டூழியங்களிலும் படுமோசமாய் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே. பெருமளவிலான அடி உதை களன்னியில் அவர்கள் மானபங்கம், கற்பழிப்பு ஆகியவற்றையும் சந்திக்க வேண்டியிருந்தது. தங்களது



படிப்பகம்

www.padippakam.com

அன்புச் செல்வங்களை தங்கள் கண்ணெதிரிலேயே சித்திரவதை செய்வதையும், கொலை செய்வதையும் பார்க்க வேண்டியிருந்தது. தங்கள் அன்புக்குரிய கணவன்மார்களையும், உடன்பிறந்தாரையும் வேட்டையாடுவதையும் கைது செய்வதையும், சாகடிப்பதையும் பார்க்க வேண்டியிருந்தது. இராணுவமும் போலீசும் நடத்திய மூர்க்கத் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காக ஆண்கள் கிராமங்களை விட்டு ஓட வேண்டி ஏற்பட்ட போது அல்லது தொலை தூரத்திலிருந்த இரகசிய இடங்களில் போராளிகளோடும் கெரில்லாக்களோடும் அவர்கள் சேர்ந்து கொள்ள வேண்டி ஏற்பட்ட போது பெண்கள், தமது கிராமத்திலேயே தங்கியிருந்து எஞ்சியவர்களை – பாலர்களையும் வயோதிகர்களையும் – பேணிக் காத்து, இன்னல்களை எல்லாம் அனுபவிக்க வேண்டியிருந்தது.

மானபங்கம், சித்திரவதை, கற்பழிப்பு ஆகியவற்றை எதிர்த்து இப்பெண்கள் மானங்காக்க நடத்திய வீரமும் உறுதியும் மிக்க போராட்டத்தின் வரலாறு என்றைக்கும் ஊக்கம் தரும்! புதிய சமூக சமத்துவம், புதிய ஒழுக்க நெறி, புதிய கலாச்சார வாழ்க்கை ஆகியவற்றின் பால் அவர்கள் அடைந்த விழிப்பும், அவர்களது அழுத்தமான போர்க்குணமும் பொருளாதார வழியிலும் சமூக வழியிலும் ஒடுக்கப்பட்ட நமது மாதர்களிடம் நீறுபூத்த நெருப்பாய் இருந்துவரும் அந்த மகத்தான புரட்சிகர உத்வேகத்தையும் ஆற்றலையும் நமக்குப் புலப்படுத்துகின்றன. இந்தப் புரட்சிகர உத்வேகம் பழமையும் பாரம்பரியமும் இணைந்த அதன் கூட்டிலிருந்து வெளிப்படுவதற்குத் துணை செய்யவும், சரியான புரட்சிகரத் திசைவழியில் அதனைச் செலுத்தவும் நாம் சிறிது சிரமம் எடுத்தால் போதும், எவ்வளவு வலிமை மிக்க பேரெழுச்சிக்கு அது வழிவகுக்கும்!

**லச்சம்மா :** நடிகட்டா கிராமத்தைச் சேர்ந்த லச்சம்மா என்னும் துணி வெளுக்கும் பெண்ணை இந்திய இராணுவம் தேடுதல்–வேட்டை ஒன்றில் கைது செய்தது. அவர் கெரில்லாக்களின் உடைகளை வெளுப்பதும், அக்கரைக்குச் சென்று பண்டங்கள் வாங்கி வருவதும் வழக்கம். அந்தப் பெண்ணை நிர்வாணமாக்கி ஒரு மரக் கிளையில் தலைகீழாகக் கட்டித் தொங்க விட்டார்கள். ராமுலம்மாவின் இருப்பிடத்தைக் கூறும் படி கேட்டு தடிகளாலும் மிலாறுகளாலும் அடித்தார்கள். அவரிடமிருந்து ஒரு வார்த்தை கூட வரவழைக்க முடியவில்லை. அவர் இந்தச் சித்திரவதையின் பாதிப்பிலிருந்து மீண்டதற்கு மருந்துகள் மட்டுமல்ல காரணம். கெரில்லாக்களும் உள்ளூர் கட்சி ஆதரவாளர்களும் அவரை அன்போடு கவனித்து, விரைவில் குணமடைய உதவினார்கள். சில நாள் கழித்து, ராமுலம்மா அவ்வழியாகச் செல்ல நேரிட்ட போது நீரோடையில் துணி வெளுத்துக் கொண்டிருந்த லச்சம்மா அவரைப் பார்த்து விட்டார்; உடனே ஓடோடிச் சென்று, மகிழ்ச்சி பொங்க அவரைத் தழுவிக் கொண்டார். இருவரும் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். அவர் ராமுலம்மாவை வீட்டுக்கு அழைத்துச் சென்று, குளிக்கச் செய்து, உணவளித்தார். கிராமத்து மக்கள் அவ்வீட்டைச் சுற்றி கூடி விட்டார்கள். லச்சம்மா அடைந்த பெரும் துன்பத்தை அவர்கள் எடுத்துக் கூறினார்கள். இந்த வீராங்கனை எங்கள் கிராமத்தவளாய் இருப்பது குறித்துப் பெருமைப்படுகிறோம் என்றார்கள். இத்தகைய வீராங்கனைகள் குறித்து தெலங்கானாவே பெருமைப்படுகிறது; நாடே பெருமைப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

## பெண்கள் தங்கள் நிலங்களைப் பாதுகாத்தல்

சாக்கலி ஆயிலம்மாதான் ஜனகாமா வட்டம் பாலகுர்த்தி கிராமத்தில் முதன் முதலாய் ஆந்திர மகாசபை, கம்யூனிஸ்டுக் கட்சி ஆகியவற்றின் துணைகொண்டு, தமது நிலத்தையும் மகசூலையும் விஷ்ணூர் தேஷ்முக்கிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு கடுமையாகப் போராடியவர். அவர் தமது குடும்பம் முழுவதும், தமது புதல்வர்களும் புதல்விகளும் கட்சியின் பக்கம் நின்று கடைசி வரை சுக துக்கங்களை அனுபவிப்பதற்கு உத்வேகமளித்தார். அவரது வீடு நிலப்பிரபுகளுக்கு எதிரான ஆந்திர மகாசபை, கம்யூனிஸ்டுக் கட்சி நடவடிக்கைகளின் மையமாகத் திகழ்ந்தது. அவர் தமது சொந்தப் பிரச்சினைக்காக மட்டும் போராடவில்லை—நிலத்துக்காக தெலங்கானா விவசாயிகளின் வலுவான போராட்டம் தொடங்கி விட்டதன் சின்னமும் அடையாளமுமே அவரது போராட்டம்.

மிர்யாலகூடெம் வட்டம் முகுந்தபுரம் கிராமத்தில், இந்திய இராணுவத்தின் "போலீஸ் நடவடிக்கை" ஆரம்பமான பிறகு கும்மாரி மட்டையாவை சித்திரவதை செய்து கொன்றார்கள். இதற்குக் காரணகர்த்தா ஒரு ஷாவுக்கார்தான். இந்த ஷாவுக்காரிடமிருந்து மீட்ட நிலத்தை அவர் கைவிட மறுத்ததே காரணம். அவரது மனைவி இந்தச் சவாலை ஏற்றார். அப்பெண்மணி நிலத்தை உறுதியாகப் பற்றி நின்றார்; பணிய மறுத்தார். அவரை போலீசார் மிருகத்தனமாயக் கற்பழித்தனர். அப்போதும் அவர் பணியவில்லை. தமக்கு ஆதரவாக மக்களைத் தட்டியெழுப்பி, நிலத்தைத் தம் வசமே வைத்துக் கொள்வதில் வெற்றி கண்டார். "நிலம் எனதே".

வாடபள்ளி மையத்தில் லம்பாடி விவசாயி ஒருவர் கொல்லப்பட்டார். தாம் மீட்ட நிலத்தை நிலப்பிரபுவிடம் ஒப்படைக்க மறுத்ததற்காகவே அவரைக் கொன்றார்கள். ஆனால் அவரது இடத்துக்கு அவரது மனைவி வந்து காங்கிரஸ் போலீசின் காட்டுத் தர்பாரைப் பொருட்படுத்தாமல், அந்த காணியை சாகுபடி செய்வதில் வெற்றி கண்டார்.

கொன்றபோலு கிராமத்தில் இரண்டு ஏக்கர் நன்செய் நிலத்தை—அதுவும் மீட்கப்பட்ட நிலம்தான்—சாகுபடி செய்துகொண்டிருந்த இன்னொரு லம்பாடியை தத்துடு என்ற நிலப்பிரபு சாகடித்துவிட்டான். இங்கேயும் அவரது மனைவி முன் வந்து அந்நிலத்தைப் பாதுகாத்து சாகுபடி செய்வதில் வெற்றி பெற்றார்.

சிலாருமியாகூடெத்தில் கோள்ள முத்தையா தாம் பயிர் செய்து வந்த நிலத்தை விட மறுத்ததற்காகக் கொலையுண்டார். ஆனால் அவரது மனைவி செயலில் இறங்கி, தொடர்ந்து பயிர் செய்தார்; அந்நிலத்தை எதிரி மீண்டும் கைப்பற்ற விடவில்லை.

மொத்துலகுண்டாவில் லம்பாடி ஒருவர் நிலப்பிரவு ராமகிருஷ்ணம்மாவிடமிருந்து துண்டு நிலம் ஒன்றைக் கைப்பற்றினார். நேரு இராணுவத்தின் தலையீட்டுக்குப் பின்னர் போலீஸ் உதவியுடன் அதனைத் திரும்பக் கைப்பற்ற நிலப்பிரபு முயன்றார். அந்த லம்பாடியை நையப்புடைத்து, அவரது வீட்டிலிருந்தும் நிலத்திலிருந்தும் வலுவந்தமாய் வெளியேற்றினார்கள். ஆனால் அவரது மனைவி வெளியேற மறுத்து உறுதியாக நின்றார். அப்பெண்மணி அந்நிலத்தில் பயிர் செய்து, மகசூலை வீடு



படிப்பகம்

www.padippakam.com

கொண்டு செல்வதில் வெற்றி கண்டார். வீராரம் என்ற லம்பாடி உழவரும் அவரது மனைவியும் தமது நிலத்தை நிலப்பிரபுகளின் ஆட்களும் போலீசும் பறிப்பதை எதிர்த்தனர். கருவுற்றிருந்த அப்பெண்ணை போலீசார் மிதித்ததில் அவர் இறந்து போனார்.

இவையெல்லாம் பழைய தெலங்கானாக் கோப்புகளில் ஏட்டிலேறிய வடிவில் எனக்குக் கிடைத்த ஒரு சில நிகழ்ச்சிகள்தாம். போராடிக் கொண்டிருந்த தெலங்கானா முழுவதிலும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் பதிற்றுக்கணக்கிலும் நூற்றுக்கணக்கிலும் நிகழ்ந்திருக்கக் கூடும். இப்படிக் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க நிகழ்ச்சிகளின் தொகை எதுவானாலும், நிலத்துக்கான இந்தப் போராட்டத்தில் பத்தாயிரக்கணக்கான பெண்கள் ஆண்களோடு சேர்ந்து நின்றார்கள் என்பது நிஜம்.

**ஜைனாபி :** ராஜாரம் கிராமத்தைச் சேர்ந்த ஜைனாபீ தோழர்கள் சல்லா சீதாராமி ரெட்டி ஆகியோர் தலைமையிலான கெரில்லாக்களுக்கு உணவும் இதர பண்டங்களும் கொண்டு செல்வது வழக்கம். நிஜாம்–ரஜாக்கர் காலம் முழுதும் இத்தோழர்கள் அருகிலிருக்கும் குன்றுகளை மையமாகக் கொண்டு செயல்பட்டு வந்தார்கள். இந்திய அரசின் சேனைகள் இந்த ஊரில் புகுந்து அட்டகாசம் செய்யத் தொடங்கின. இயக்கம் வலுவாயிருந்த எல்லாக் கிராமங்களிலும் இராணுவ முகாம் அமைத்தார்கள். ராஜாரம் கிராமத்திலும் அமைத்தார்கள். ஆனால் ஜைனாபீ அச்சப்படவில்லை. இன்னும் அதிகக் கவனத்துடன் திட்டமிட்டு, இன்னும் அதிக சாதுரியத்துடனும் துணிவுடனும் தொடர்ந்து பணியாற்றினார். கெரில்லாக் குழுவுடன் தொடர்பறுந்து போன மூன்று கெரில்லாக்களை ஒளித்து வைத்து, பின் கெரில்லா வழங்கல் – மையத்திற்கு அனுப்பி வைத்தார். முகாமிலிருந்த இராணுவத்தினர் ஒரு நாள் அவரது வீட்டை சோதனையிட்டு, அவரைப் பிடித்து, அடித்து சித்திரவதை செய்தனர். "சீதாராமி ரெட்டி இருக்குமிடத்தைச் சொல், உன்னை விட்டு விடுகிறோம்" என்றனர். "எனக்கு ஒன்றும் தெரியாது" என்று அவர் பதிலளித்தார். ஜமேதார் அப்பெண்ணைக் காலால் மிதித்தான். ஆனால் ஒரு வார்த்தை கூட வெளிப்படவில்லை. இந்தக் கொடுமையிலும் அவர் தப்பிப் பிழைத்து, போராட்டக் காலம் முழுதும் கெரில்லாக்களுக்குத் தொடர்ந்து உதவி வந்தார். அவர் இளம் வயதிலேயே கணவனை இழந்தவர். அவரது தம்பியும், தம்பியின் புதல்வர்களும் கூலி வேலை செய்து அவருக்கு உதவி வந்தனர். அவர் வறுமை என்றால் என்ன என்று நன்கறிந்தவர். தங்களுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் கட்சியின் பால் அவர் கொண்டிருந்த பற்றுதலுக்கு இதுவே காரணம்.

## கூலி உயர்வுக்கான பெண்கள் போராட்டம்

விவசாயத் தொழிலாளர்களில் பெண்கள் கணிசமான விழுக்காடாவர். அவர்கள் மிகப்பெரும் தொகையில், அநேகமாய் ஆண்களுக்கு சமமாய் இருக்கிறார்கள். ஏனெனில் தாமும் தம் குழந்தைகளும் ஒரு வேளையாவது வயிற்றைக் கழுவவேண்டுமென்றால் அவர்களும் சம்பாதித்தாக வேண்டும். ஆண்களின் சம்பாத்தியத்தை மட்டுமே அவர்கள் நம்பியிருக்க முடியாது. இந்நிலையில், விவசாயத் தொழிலாளர்களின் எல்லா வேலை நிறுத்தங்களிலும், நிலப்பிரபுகள், தேஷ்முக்குகளின் களஞ்சியங்களிலிருந்தும் கடிகளிலிருந்தும் தானியத்தைக் கைப்பற்றுவதிலும் பெண்கள் ஏராளமாய் பங்கேற்றதில் வியப்பில்லை.



படிப்பகம்

www.padippakam.com

கொன்றபள்ளி மையத்திலும் ஏனைய அண்டைப்புற மையங்களிலும் அநேக கிராமங்களில், அப்போது நாட்கூலியாகத் தரப்பட்டு வந்த 2 அல்லது 3 சேர் என்பதை 4 சேராக உயர்த்தக் கோரி விவசாயத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் ஏராளமான பெண்கள் கையில் கொடியேந்தி அணிவகுத்தார்கள்.

முடிவில் நிலப்பிரபுகளை உடன்பாட்டுக்கு வரச் செய்யும் பொருட்டு, தாக்குதல் நடத்தி தானியம் கைப்பற்றும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியிருந்தது. பெண்களும் இதில் கலந்து கொண்டார்கள். நிலப்பிரபுகள் வேறு வழியின்றி கோரிக்கைகளை ஏற்க வேண்டியதாயிற்று.

கோதாவரி வனப் பகுதியில் பீடி இலை பறிக்கும் வேலையில் பத்தாயிரக்கணக்கான பெண்கள் ஈடுபட்டிருந்தார்கள். அங்கு கூலி உயர்வுக்காக நடைபெற்ற போராட்டத்தில் பெண்கள் முன்னுக்கு நின்றார்கள்.

மேலும் பிண்டிபுரோலு, இல்லேந்து ஆகிய இரு மையங்களிலும் 90 கிராமங்களில் நடைபெற்ற விவசாயத் தொழிலாளர் வேலைநிறுத்தப் போராட்டங்களில் பெண்களும் கலந்து கொண்டார்கள். குறிப்பாக 20 கிராமங்களில் அவர்கள் முன்னுக்கு நின்றார்கள். இவ்வேலைநிறுத்தங்கள் முக்கியமாய்ப் பெண் தொழிலாளர்களுக்கான கூலி உயர்வு போன்ற கோரிக்கைகளுக்காக நடைபெற்றவை. இவற்றில் அதிகமாய்க் கலந்து கொண்டவர்களும் தலைமைப் பொறுப்பு வகித்தவர்களும் பெண்களே.

*(அடுத்த இதழில் தொடரும்)*

## விலையேற்றம்

பேருந்து, மின்சாரம், பால்
விலையேற்றம் – ஓர்
கசப்பு மருந்து.
அறிவித்த மாண்புமிகு மந்திரி
காரில் பறந்து
பாதாம் பால் பருகியபடி
ஏசி அறையில்
பேருந்தில் ஏற முடியாமல்
பாலுக்கு அழும்
குழந்தையுடன் நடக்கும் தாய்–
தெருவில்!

– ஜீவாலமுகி



படிப்பகம்

www.padippakam.com

# பெண் ஆட்டோ ஓட்டுநரிடம் ஒரு நேர்காணல்:

(வீட்டுச் சிறையிலிருந்து வெளிவரும் பெண்களின் வாழ்க்கையில பல மாற்றங்கள் அடைந்துள்ள இத்தருணத்தில், பெண்களாலும் ஆட்டோ, பேருந்து போன்ற அனைத்து ஊர்திகளையும் ஓட்டி, ஆண்களுக்கு சரிநிகர் பெண்களே என்பதை பெண்கள் யதார்த்தத்தில் ஊர்ஜிதப்படுத்தி வருகின்றனர். பல இன்னல்களுக்கு இடையில் தன்னம்பிக்கையுடன், விடாமுயற்சியுடன் ஆட்டோ ஓட்டி பலருக்கும் முன்னுதாரணமாக திகழ்பவர்கள், பல ஆட்டோ மற்றும் ஏனைய ஊர்தி ஓட்டும் பெண்கள்! இவர்களில் பூமாரி என்ற பெண் ஆட்டோ ஓட்டுநரிடம் 'பெண் உரிமை' இதழின் சார்பாக நேர்காணல் செய்யப்பட்டது. பூமாரி அவரின் அனுபவங்களை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார். – ஆசிரியர்.)

என் பெயர் பூமாரி. என் வயது 42. கடந்த ஐந்து ஆண்டுகளாக, நான் ஆட்டோ ஓட்டி கொண்டு இருக்கிறேன். ஆட்டோவை கடனில், தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலமாக வாங்கினேன். நான், சொந்த ஆட்டோ வாங்குவதற்கு முன், வாடகை ஆட்டோ ஓட்டி வந்தேன். அப்படி ஓட்டிக் கொண்டிருக்கும் போது, தின வாடகை ரூ.100/–ம், மாதக் கட்டணம் ரூ.2500/–ம் ஆட்டோ முதலாளிக்கு தரவேண்டும். வருமானமே இல்லையென்றாலும், கை காசு போட்டாவது, இந்த பணத்தை கொடுத்தாக வேண்டும். அப்படி கட்ட முடியவில்லையென்றால் வண்டியை எடுத்து கொண்டு சென்று விடுவாங்க. இதனால் கடன் சுமை அதிகமானது.

மூன்று வருட தவணையில் ரூ. 90,000/–க்கு ஆட்டோ வாங்கினேன். இன்னமும் கூட ரூ. 15,000/– ஆட்டோ வாங்கிய கடன் உள்ளது. ஆட்டோவில் கிடைக்கும் வருமாணம் பற்றாக்குறையாகவே தான் உள்ளது. நான் முதன்முதலாக ஆட்டோ ஓட்டும்போது, வீட்டிலிருந்து பயங்கர எதிர்ப்பு வந்தது. நான் அந்த எதிர்ப்பையும் மீறி ஓட்ட சென்ற போது, உடனடியாக ஒப்புக் கொள்ளவில்லை. வீட்டினுடைய நிதி பற்றாக்குறையை எடுத்துக் கூறி, பெண் ஆட்டோ ஓட்ட கூடாதா என்ன, என்றெல்லாம் பல விசயங்களை கூறி பல போராட்டங்களுக்கு பின் தான், நான் ஆட்டோ ஓட்டும் வேலைக்கு வந்தேன். வீட்டுல இருக்கிறவங்களுக்கு 'அடங்காமல்' போவதாக கூறினார்கள். இதனால், வீட்டை விட்டு தனியாக வெளியே செல்லும் நிலை கூட ஏற்பட்டது. என் கணவருக்கும் எனக்கும், பிரச்சனைகள் கூட வளர்ந்து கொண்டே வந்தது. பிரச்சனைகளை நான் கண்டுகொள்ளாமல் இருந்தேன். பின், நேரடியாக கூறுவதை விட்டு, மறைமுகமாக கூற ஆரம்பித்தார்கள். ஆனால், தற்பொழுது வீட்டில் எந்த பிரச்சனையும் இல்லை.

சுற்றத்தாரும் தவறாகவே பார்த்தார்கள். பெண்கள் வீட்டை விட்டு வெளியேறி விடுவாளோ என்ற பயத்தினால், அடிமைப்படுத்துகிறார்கள். ஐந்து வருடமாக அனைவரிடமும் நல்ல பெயர் எடுத்ததனால், தற்பொழுது எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆனால், சுற்றார் அனைவரும் எதிரிபோல் பார்க்கின்றனர். வீட்டிலையும் வேலை பார்த்துட்டு, வேலைக்கு செல்கிறேன். காலையில் 4.00 மணிக்கு எழுந்து அனைத்து வேலைகளையும் முடித்து 7.00 மணிக்கு செல்கின்றேன். வீட்டில என் வேலையை பகிர்ந்து கொள்ள யாருமே இல்லை. டவுனுக்குள்ளும், தொலைதூரம் நகரத்திலிருந்தும் 17 கிலோ மீட்டருக்கு சவாரி செல்லுவேன். இரவு 6 மணிக்கு மேல எங்கும் செல்வதில்லை.

ஆட்டோ ஓட்டும்போது, சக ஆண் ஓட்டுநரால் பிரச்சனைகள் வருவதுண்டு. கேலி, கிண்டல் செய்கின்றனர். ஆரம்பத்தில் ஆண்களுக்கு நிகராக வண்டி ஓட்டுவதை சிலர் கேலி செய்தனர். ஆனால் பிரச்சனைகள் அவ்வளவாக வரவில்லை. இக்கட்டான சூழ்நிலைகளில் உதவி செய்வார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

ஆண்களால் குறிப்பான பிரச்சனையை சந்தித்ததில்லை. பயணிகளாக வரும் ஆண்களால் எந்தப் பிரச்சனையும் இதுவரை ஏற்பட்டதில்லை. விதிகளை சரியாக பின்பற்றுவதால் போலீசாரால் எந்தப் பிரச்சனையும் இல்லை. லைசன்ஸ் இல்லாததால், லஞ்சம் வாங்கும் பழக்கம் எல்லாம் போலீசாரிடம் காணப்படுகிறது. ஆனால், என்னிடம் லைசன்ஸ் இருப்பதால் எந்த பிரச்சனையும் இல்லை.

பெண்கள் ஆட்டோ ஓட்டுவது மக்களிடையே வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது. பலர் பெண்ணுக்கு ஏன் இந்த வம்பு என்று தவறாகவும் கூறுவதுண்டு. குடும்பத்தாரின் பேச்சுக்களை ஏற்றிருந்தால் இந்த வேலைக்கு வந்திருக்க முடியாது. மற்றவர்களின் ஊக்கத்தினால் தான் இத்தொழிலுக்கு வரமுடிந்தது. பஸ், வேன், கார் போன்ற வாகனங்களையும் ஓட்ட ஆர்வமாய் உள்ளது. மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற ஆர்வமும் என்னுள் உள்ளது.

பெண்கள் வெளியில் வந்து, ஆட்டோ ஓட்டுவதால் மட்டும் பெண்களின் பிரச்சனைகள் தீராது. பெண்கள் அனைவரும் தைரியமாகவும், தன்னம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். யாரையும் எதிர்த்துப் போராட வேண்டும். எந்தப் பிரச்சனையையும் எதிர்க்கொள்ள வேண்டும். பயப்படக் கூடாது. அடுப்படியே உலகம் என்று அடைந்துவிடக் கூடாது. மற்றவர்களை எதிர்பாராமல் சார்ந்து வாழாமல் சுயமாக வாழ வேண்டும். வீட்டில் உள்ள பெண்கள் வெளியில் வரவேண்டும். "போராட்டமே வாழ்வின் விதி." போராடாமல் எதையும் சாதித்து விட முடியாது.

## 'ஜெ' அரசின் காட்டாட்சியை முறியடிப்போம்!

அன்பார்ந்த நண்பர்களே!

தீபாவளி காலக் கட்டத்தில், தமிழகத்தில் போக்குவரத்து தொழிலாளர்கள் 20% போனஸ் கோரி ஒரு மாத இடைவிடாப் போராட்டம் செய்தது, நாமனைவரும் அறிந்ததே! தனியார்மயமாக்கலின் ஒரு கட்டமாக, இத்தருணத்தில் பல தனியார் பேருந்துகளை ஓடவிட்டு, மக்களின் வயிற்றில் அடித்தது, தமிழக அரசு! அந்நிய கட்டண வசூலால், மக்கள் கதிகலங்கினர்.

தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கை இடைவிடா போராட்டத்தை தமிழக அரசு இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கியது. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். பலர் மீது பொய் வழக்குகள் தொடரப்பட்டன. இதுபோன்று அரசின் தொழிலாளர் விரோத போக்கினாலும், தொழிற்சங்கங்களின் சமரசத்தினாலும் தொழிலாளர்களின் போராட்டம் முடக்கப்பட்டது.

அ.தி.மு.க. அரசு, இதன் அடுத்த கட்டமாக சட்ட கல்லூரி மாணவர்களை தாக்கியுள்ளது. காக்கி சட்டை ரவுடிகள், அரசு சட்ட கல்லூரி மாணவர் விடுதியில் புகுந்து தாக்கியதில் 40 மாணவர்களின் மண்டை உடைந்து, கால் உடைக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இத்துணை கடுமையாக தாக்கிய காவல்துறை அதிகாரிகளின் மீது இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், அவர்களை பேணி பாதுகாத்து வருகின்றது, தமிழக அரசு!

இவ்வாறு, அ.தி.மு.க. அரியணையில் ஏறிய காலம் முதல், நியாயம் கேட்டு போராடிய தொழிலாளர்கள் மற்றும் அப்பாவி மாணவர்கள் மீது காட்டு தர்பார் நடத்தி வருகின்றது, தமிழக அரசு! தமிழக அரசின் இந்த காட்டாட்சியை முறியடிப்போம்!

அதேசமயம், சட்ட கல்லூரி மாணவர்களை தாக்கிய காவல்துறை அதிகாரிகளை பணிநீக்கம் செய்யும்படி, 'பெண் உரிமை' கோருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# சித்தி

## மெகாத் தொடர்கள் பற்றிய நமது தொடர்

**- சேது**

கடந்த சில நாட்களுக்கு முன்பாக சித்தி மெகாத் தொடர் சன் டிவியில் முடிந்துவிட்டது. அடுத்ததாக சித்தி தொடரை தயாரித்த ராடான் நிறுவனம் அத்தொடரின் காவேரி பாத்திரத்தின் பெயரை கொண்டு மீண்டும் ஒரு மெகா தொடரை அதே நேரத்தில் துவங்கியுள்ளது. தொலைக்காட்சி பார்வையாளர்களிடையே இதுவரை மெகா தொடர்கள் பற்றி இருந்து வந்த மதிப்பீட்டையே சித்தி தொடர் மாற்றியுள்ளது. 400 நாட்களாக ஒலிபரப்பப்பட்ட இத்தொடரானது எல்லா தளங்களிலும் உள்ள படித்தவர், பாமரர், உயர்ந்த பிரிவினர், தாழ்ந்த பிரிவினர், ஆண்–பெண், நகரத்தினர், கிராமத்தினர், மூத்தோர், இளையோர் என எல்லா பிரிவினரையும் ஈர்த்துள்ளது.

இவர்கள் நாள் தவறாமல் இத்தொடரினை பார்த்துள்ளது மட்டுமின்றி இத்தொடரை ஒருநாள் பார்க்காமல் இருந்தாலே எதையோ இழந்ததை போன்று உணர்ந்ததாகவும் தெரிவித்துள்ளனர். இத்தொடரின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் பேசிய முன்னாள் முதல்வரே அப்படி பார்க்கத் தவறிய தொடரினை பார்த்தவர்களிடம் கேட்டு தெரிந்துகொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். அனைவரையும் இந்த அளவுக்கு பாதித்த சித்தியில் என்னதான் இருந்தது? சித்தி மட்டுமல்ல; இன்று பரவலாக தனியார் டிவி சேனல்களில் ஒலி பரப்பாகும் மெகா தொடர்கள் மக்களை ஈர்ப்பதற்கு காரணம் என்ன?

### ஓய்வெடுப்பதை தியாகம் செய்யமளவுக்கு

கடுமையாக உழைத்து விட்டு ஓய்வெடுப்பதையே தியாகம் செய்துவிட்டு பார்க்கும் அளவுக்கு மக்களின் அன்றாட வாழ்வையே பாதிக்கும் இத்தொடர்கள் பற்றி சமூகம் மாற்றத்தின் அக்கறையுள்ளவர்கள் அவசியம் சிந்திக்க வேண்டும் என்பதற்காக ஒரு ஆரோக்கியமான விவாதத்தை தூண்டுவதற்காகவே இங்கு சித்தியை மையமாக கொண்டு மெகாத் தொடர்கள் ஆராயப்படுகின்றன.

தந்தையான தாத்தாவையும் எதிர்த்து நேர்மைக்காக தனது வீட்டை துறந்து ஒருவரின் இரண்டாவது துணைவியாக வாழ்க்கைப்பட்டு கடுமையான உழைப்பின் மூலம் முன்னேறி எதிரிகளின் அனைத்து தடைகளையும் தனி ஒருவராக நின்று சாத்வீகமான முறையில் முறியடித்து பிரகாசிப்பதாக சித்தி என்ற தொடரின் சாரதி கதாபாத்திரம் படைக்கப்பட்டிருக்கிறது.

### நியாயப்படுத்துவது

இங்கே முதல் மனைவி மனநிலை சரியில்லாதவர், ஆற்றில் மூழ்கி இறந்துவிட்டார் என்று நம்பிவிட்டதாலே, இரண்டாவது திருமணம் செய்துகொண்டதாக இரு மனைவியை வைத்துக்கொள்ளும் ஆண்களின் ஏகபோக உரிமைக்கு எல்லா தொடர்களையும் போல ஒரு நியாய கதை கற்பிக்கப்படுகின்றது. இந்த நியாய



படிப்பகம்

www.padippakam.com

கதை சாரதா முதல் மனைவியை சமமாக நடத்துவதன் மூலமாகவும் அவரை தன் வீட்டிலேயே இருக்க சொல்வதன் மூலமாகவும் மேலும், மேலும் நியாயப்படுத்தப் படுகிறது. (இங்கே கணவன் அவளை வீட்டிலிருக்க சொல்லவில்லை. அவன் முதல் மனைவியை துரத்துவதிலேயே குறியாக இருப்பதும், அது கண்டிக்கப்படாமல் இருப்பதும் கவனிக்கத்தக்கது). இதுவரை ஒருவனை மணந்துகொண்ட சக்கலத்தி சண்டைகளைதான் நாம் பார்த்திருக்கின்றோம். ஆனால் இரண்டாவது மனைவிக்கும் மணந்துகொள்ள ஆசைப்பட்டவருக்கும் இடையிலான 25 வருட கால தீராத பகையை அடிப்படையாக வைத்தே 300 காட்சிகளுக்கும் மேலாக எடுக்கப்பட்டுள்ளது.

## பத்தாம் பசலி ஆணாதிக்க கருத்து

இப்படி ஒரு நீண்ட காலம் இருப்பதும் சாத்தியமா என்ற கேள்விக்குறி ஒரு புறம் இருக்க, மற்றொரு புறம் பெண்ணுக்கு பெண்தான் எதிரி என்ற பத்தாம் பசிலி ஆணாதிக்க கருத்தை உயர்த்திப் பிடித்து, எதிராளியான பிரபாவதி செய்யும் சதிகள், கொலைகள் செய்யும் காட்சிகளை ஒரு மோசமான மர்ம நாவலை போல காட்சிக்கு காட்சி விறுவிறுப்பு காட்டியுள்ளனர்.

அடிப்படையே பலவீனமாக இருக்கும் இத்தொடரில் நிதானமாக அதே சமயத்தில் தீர்க்கமாக சிந்தித்து முடிவெடுக்கும் பெண்ணான சாரதா இப்பண்புகள் மூலமாக தன்னை ஒரு புதுமை பெண்ணாக தொடர் முழுவதும் வெளிப்படுத்தி கொண்டிருக்கிறார். அவர் எதிராளியான பெண் பிரபாவதியின் சதிகளை முறியடிக்கும்போதும் பிரபாவதி ஒவ்வொரு சதியில் தோல்வியுறும்போதும் சாரதாகவே தம்மை அடையாளம் படுத்திக்கொள்ளும் பெண் பார்வையாளர்கள் இதில் ஆழ்ந்து விடுகின்றனர். சாரதாவை போலவே வெற்றி பெறும்போது மகிழ்ச்சி அடைந்து தோல்வியுறும்போது வருந்துவதும் போன்ற உணர்வுகளுக்கு உள்ளானதாக பெண் பார்வையாளர்கள் பலர் கருத்து தெரிவித்துள்ளது இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

## கயமை கண்டு புலம்புதல்

இந்த தொடரில் ஆணாதிக்கம் சமுதாயத்தின் அடிப்படைகள் எந்த வித கேள்விகளுக்கும் உட்படுத்தப்படவில்லை. பெண் என்றாலே திருமணத்திற்கு படைக்கப்பட்டவள்; அவள், தான் பிறந்து, வளர்ந்த, குடும்ப உறவுகளை விலகி, புகுந்த இடத்தில் தன்னுடைய அடையாளத்தை விட்டுவிட்டு கணவரின் உறவினர்களுக்காக வாழ வேண்டும்; கணவனை சார்ந்தும், பின்னர் வயதானபோது மகனைச் சார்ந்தும் வாழவேண்டும் என்ற ஆணாதிக்க குடும்ப அமைப்பின் இறுக்கமான விதிகள் பெண்ணை மூச்சு திணற வைக்கின்றன.

இந்த தொடரில், ஆணாதிக்க பாரம்பரிய பண்பாட்டு மதிப்பீடுகளை எந்த வித கேள்விக்கும் உட்படுத்தாமல், ஆண், பெண் உறவுகளுக்கிடையில் பெண்ணுக்கு சற்று பரந்த இடம் கொடுப்பதைபோல உருவாக்கப்பட்டிருக்கும் சாரதாவின் பாத்திரப்படைப்பு பெண் பார்வையாளர்களின் கனவுலக நாயகியாக அவர்களின் உள்ளார்ந்த விருப்பங்களை பூர்த்தி செய்வதால், அவருடன் அடையாளப்படுத்திக் கொள்ள வைத்திருக்கிறது. ஏனெனில், சாரதா குடும்ப அமைப்பை விட்டு விலகாதவராக, குடும்பத்தின் மொத்த சுமையையும் தானே தூக்கி சுமப்பவராக, அதே சமயத்தில் கணவனின் பொறுப்பின்மையையே சகித்துக் கொள்ளும் பூமாதேவியாக தொடர் முழுவதும் அவர் வலம் வருகிறார். அதற்காக அவர்



படிப்பகம்

www.padippakam.com

அங்கீகாரம் பெறுகிறாராம். இந்த அங்கீகாரத்திற்கு ஏங்கி, குடும்ப–அடிமை உறவுகளில் உழலும் பெண்கள் அவருடன் அடையாளம் படுத்திக்கொள்பதில் வியப்பேதுமில்லை. ஆனால் தொடரில் ஆணாதிக்க மதிப்பீடுகளுக்கு எந்தவித பாதிப்பும் நேராமல் அவை தொடர் முழுவதும் நேரடியாகவும் உயர்த்திப் பிடிக்கப்படுகின்றன. சாரதா, ஐ.ஏ.எஸ் அதிகாரியாக இருப்பினும் அடுப்படி வேலைதான் பெண்களுக்கு என்று நிறுவுகிறார். வெள்ளை உடையும் மடிப்பு கலையாமல் ஈசி சேரில் அமர்ந்து அதிகாரம் பண்ணும் கணவனுக்கு காப்பி தயாரித்து கொடுக்கிறார். எந்தவித பொறுப்பின்றி, ஊதாரித் தனமாகவும், குடும்பத்தின் நெருக்கடியை சந்திக்க துணிவின்றி, கோழையாக குடும்பத்தைவிட்டு ஓடிப்போகும் கணவன்போலும் ஆன்மீக வேடத்தை அங்கீகரித்து அவர் இருக்கும் இடத்திலேயே போய் ஆலோசனை கேட்கிறார். ஒரு இடத்தில் மென்மையாக கண்டித்தும் கொள்கிறார். தானே கம்பெனி பொறுப்பை சுமந்தாலும் வீட்டு வேலைகளையும் செய்கிறார்.

ஆன்மீகம் வாசம் முடிந்து வீட்டிற்கு திரும்பி வந்து எவ்வித பொறுப்பில்லாமல் ஈசி சேரில் அமர்ந்து அதிகாரம் செய்யும் கணவனை கண்டிக்காமல் அவரை (ராமு பாத்திரமே நல்லவராக படைக்கப்பட்டிருப்பதும், இப்பாத்திரம் இரசிக்க வைக்கப்பட்டிருப்பதும் ஆச்சரியமான ஒன்று.) குடும்ப தலைவனாகவே ஏற்றுக்கொள்கிறார். ஒரு மனித உயிரை உற்பத்தி செய்யும் பெண்ணுக்கு அந்த உயிரின்மீது முழு உரிமை உண்டு. ஆனால், பத்து மாதம் சுமந்து பெற்ற மகனை தாயின் விருப்பம் மற்றும் அனுமதி கேட்காமலேயே இடம் மாற்றுவதற்கு கணவனுக்கு ஏது உரிமை? பெண்ணுரிமையின் அடிப்படையையே கேள்விக்குள்ளாக்கும் கணவனின் கயமையை எதிர்த்து ஆவேசப்படாமல், “நீங்கள் என்னை புரிந்துகொள்ளவில்லை” என்று சாரதா அழுது புலம்புகிறார்.

## *மெகா தொடர்கள் ஏன்?*

பெண்களை தவிர ஆண்களும் மற்றும் அனைத்து தரப்பினரும் சித்தியை எப்படி இரசிக்க முடிந்தது என்ற கேள்வி எழலாம். இங்கேதான் சின்னத்திரைகளில் வரும் மெகா தொடர்கள் தோற்றத்தை புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளாகவே திரைப்பட துறை அதிலும் குறிப்பாக தமிழக திரைப்பட துறை மிகவும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. நடிகர்களின் மிக உயர்வான சம்பளம் (விஞ்ஞானிகளுக்கு கூட இத்தகைய உயர்வான சம்பளம் கிடையாது!). படம் எடுக்கும் சம்பளம் உள்ளிட்ட பல காரணங்களினால் கடுமையான பொருளாளாதா நெருக்கடிக்குள்ளானதால் தமிழ்பட இயக்குநர்களும், நடிகர்களும், தொழில் நுட்ப கலைஞர்களும் சின்னத்திரையை நோக்கி நகர்ந்து வருகின்றனர். பெரிய திரையைவிட சின்னதிரையில் உடனடியான சம்பளம், சமூகத்தின் அனைத்து தரப்பினரும் பார்ப்பதால் கிடைக்கும் புகழ் இவற்றினால் உந்தப்பட்டு ஏறக்குறைய ஒரு சினிமா எடுப்பதை போன்ற மெகா தொடர்கள் உருவாக்கப்படுகின்றன.

ஆக, நம்மிடையே ஏற்கெனவே இருந்த கனவு தொழிற்சாலையான பெரிய திரையுடன் இனனொரு கனவு தொழிற்சாலையாக சின்னத்திரையும் இணைந்து கொண்டுவிட்டது. சின்ன கனவு தொழிற்சாலை வீட்டின் படுக்கையறை வரை நம்மை ஆதிக்கம் செய்ய தொடங்கிவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

## சின்ன கனவு தொழிற்சாலையின் தந்திரங்கள்

இக்கனவு தொழிற்சாலை சமூகத்தில் உள்ள சில நனவு (நிஜ) அம்சங்களை எதார்த்தங்களை பிரதிபலிக்கின்றது. இச்சில நனவு அம்சங்களை, கொண்டே கனவுகளை அது உற்பத்தி செய்கிறது. சித்தி உள்ளிட்ட தொடர்களில் இச்சில அம்சங்கள்தாம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு தயாரிக்கப்படுகின்றன. உதாரணமாக மக்களிடத்தில் உள்ளார்ந்த முறையில் இருப்புக்கொண்டிருக்கும் நியாயத்தின் மீதான ஆர்வம், தீய சக்திகளின் அழிவின் மகிழ்வு, ஆளும் சக்திகளின் மீதான வெறுப்பு, எதிர்ப்புணர்வு, வன்முறை, மனோநிலை போன்ற உணர்வுகள்.

சமூக நெருக்கடிகள் மிகவும் ஆழமாகும்போது இத்தகைய உணர்வு அம்சங்களின் அழுத்தமும் பெருகிகொண்டே போகிறது. மக்களின் இவ்வுணர்வுகள் கணக்கில் கொள்ளப்பட்டு தொடர்கள் தயாரிக்கப்படுகின்றன. சித்தி தொடர் வெற்றி பெற்றதற்கு காரணம் இவ்வுணர்வுகள் சரியாக எடுத்துக்கொள்ளப்பட்டு, அதே சமயத்தில், அத்தொடரின் கதாபாத்திரங்கள் சமூகத்தின் அடிப்படை , எதார்த்தமான சாதி, வர்க்க அடையாளமின்றி, கனவுலக மாந்தர்களாக நடமாட வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் அதையும் மீறி சுவேதா என்ற கதாபாத்திரம் சேரியிலிருக்கும் ஒருவரை திருமணம் செய்யும்போது சித்தியின் வெறுப்புணர்வும், அந்த வெறுப்புணர்வை நியாயப்படுத்த சேரி மக்களை வலிந்து அருவறுப்பாக காட்டுவதும், எதன் பின்புலத்தில் என்பது அனைவரும் ஊகிக்க தக்கதே. அதே சமயத்தில் படுகொலைகள் சதிகளை செய்யும் பிரபாவதி கோஷ்டியினர் நாகரீகம் மிக்கவர்களாக காட்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த தொடரில் காண்பிக்கப்படும் இன்னொரு கனவு மிகவும் பழமையானதுதான். அது, அதிமானுடத்தன்மை. இந்த அதிமானுடத்தன்மையுடன் பெண் எம்ஜிஆரான சாரதாவை சுற்றியுள்ளவர்கள் அனைவரும் பலவீனமான பெண்கள். அவரது எதிரியும் பலவீனமான பெண்தான்.

எவ்வளவுதான் தொடரில் புதுமைப்பெண்ணாக காட்டிக்கொண்டாலும், அவர் கொடூரமான டேனியுடன் சேர்ந்து பிருந்தாவுக்கு கூறும் ஆலோசனை எல்லோரையும் அறுவறுக்கச் செய்துவிடுகிறது. பிருந்தா நேசித்தவருடன் நண்பராக இருக்க சொல்வதும், அதைவிட அபத்தம். டேனி ஒரே சிகிச்சையில் திருந்தி விடுவது நம்பத்தகுந்ததாகவும் இல்லை.

## அதிகரித்துவரும் இடைவெளி

சித்தி தொடரில் முன்வைக்கப்படும் அனைத்து ஆணாதிக்க மதிப்பீடுகளிலும் இன்றைய அனைத்து மெகாத் தொடர்களிலுமே) மிக முக்கியமானதும், அபாயகரமானதுமான, மதிப்பீடுமான தனிநபர் உழைத்தால் முன்னேறிவிடலாம் என்பதுதான். "தெருவிளக்கில் படித்து நீதிபதியானார்" என்பதும் "சைக்கிள் கடை வைத்திருந்து உழைத்தவர் பஸ் கம்பெனி முதலாளியானார்" என்பதும் காலங்காலமாக இந்த வர்க்க–சாதீய சமூகம் உழைப்பாளர்களுக்கு போலியான நம்பிக்கையூட்ட பரப்பி வரும் மதிப்பீடுகளாகும். இன்றைய சமூகத்தில் ஏகாதிபத்தியங்களும், உள்நாட்டில் ஆதிக்க வர்க்கங்களும் – சாதியினரும் இழைக்கும் கொடூரங்களினால் மக்கள் அவதியுற்று வருகின்றனர். இவர்களின் கொடூரங்கள் தலைவிரித்தாடுகின்றன ஆனால் அதேசமயத்தில் தடையற்ற சந்தை, உலகமயமாதல், தாராளவாத, பொருளாதா கொள்கைகளினால் பொய்யான நம்பிக்கைகளை தூவிக்கொண்டே செல்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

இந்த பொய்யான நம்பிக்கைக்கும் உண்மையான நடைமுறைக்கும் இடையிலான இடைவெளி நாள்தோறும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

## பெண் எம்.ஜி.ஆர்

தொலைக்காட்சி தொடர்கள் இந்த இடைவெளியை பொய்யான அளவில் குறைக்க முயற்சிக்கின்றனர். புதிய கற்பனையுலகில் சஞ்சரிக்க துணைசெய்கின்றன. புதிய புதிய மாயைகளை திறந்துவிடுகின்றனர். தொலைக்காட்சி தொடர்களில் தனிநபர் இயல் (Individualism) ஒரு சித்தாந்தமாக மக்கள் மனதில் ஆழமாக ஊன்றப்படுகின்றது. ஒரு செயலின் வெற்றி தோல்வியில் தனிநபரின் முயற்சிக்குரிய பங்கை நாம் மறுக்க முடியாது. ஆனால் எந்தவொன்றில் வெற்றி தோல்விக்கும் தனிநபரின் முயற்சி அல்லது முயற்சியின்மை மட்டுமே காரணம் என்று கூறுகின்ற தனிநபர் இயல் ஒரு சித்தாந்தமாக காட்சி படிமத்தின் ஊடாக விளக்கப்படுகிறது. ஏழைகளின் ஏழ்மைக்கும் பணக்காரனின் செழிப்புக்கும் அவரவரே காரணங்கள் என்ற கருத்தின் நீட்டிப்பே இது. இது கூட்டு மனோபாவம், கூட்டு செயல்பாடு ஆகியவற்றை நிராகரிப்பதோடு தனிநபர் வழிபாட்டுக்கு வழி வகுக்கிறது. இதன் உச்சமா விளங்குவது எம்.ஜி.ஆர்களும் ரஜினிகளும் இப்போது சித்தியின் பெண் எம்.ஜி.ஆரும் ஆகும். பெண் எம்.ஜி.ஆர் சாரதாவை தவிர மற்ற அனைத்து பெண்களும் சாதாரண பிரச்சனையை சந்திக்க இயலாத பலவீனமானவர்களாக காட்டப்பட்டுள்ளனர்.

## இரசிகர் முகத்தில் பூசிய கரி

புதுமைப்பெண் பிரச்சனைகளை தனித்து நின்று போராடுபவர் என்றெல்லாம் அடையாளப்படுத்திக்கொண்ட சித்தியின் கதாநாயகியும் தயாரிப்பாளரும் கடைசியாக தான் யார் என்பதை சுயமாகவே அம்பலப்படுத்தி விட்டார். இத்தொடருக்கான முடிவு பகுதியில் இத்தொடரின் வியாபாரம் இரகசியத்தையும் வெளியிட்டு விட்டனர். அவர்களின் வார்த்தைகளிலேயே இங்கே கூறுகிறோம். "சினிமாவை போன்ற பிரமாண்டம், தினம் அரை மணி நேரம் மூன்று விளம்பர இடைவேளைகள் (ஒரு விளம்பரத்திற்கு குறைந்தது ஐம்பதாயிரம் என்று கணக்கிட்டு கொள்ளுங்கள்) இரசிகர்கள் வேறு சேனலுக்கு தாவிவிட முடியாதபடி கட்டிப்போட ஒவ்வொரு விளம்பர இடைவேளைக்கு முன்பும் ஒரு திருப்பத்தை வைத்திருந்தது" என மிகப்பெரிய வியாபாரம் செய்துள்ளதை பேச்சுவாக்கில் வெளியிட்டு விட்டனர். அதாவது சந்தையை நோக்கிய சிந்தையுடன் கதையை 400 தொடர்களாக சவ்வாக இழுத்ததை மறைமுகமாக ஒப்புக்கொண்டுவிட்டனர். அதற்கெல்லாம் மேலாக ஏகோபித்த ஆதரவு தந்த தமிழக இரசிகர்கள் அனைவரையும் கடைசி தொடர் 400–ன் மூலமாக – பிரபாவதி ஏன் கொலைகள் செய்தார்? என்பதையோ ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரிக்கும் அவருக்கும் என்ன உறவு? என்பதுபோன்ற அடிப்படை கேள்விகளுக்கெல்லாம் பதில் அளிக்காதது மட்டுமின்றி, கடைசி காட்சியில் கொலையுண்டவர்கள் அனைவரையும் உயிருடன் போட்டோ எடுக்க வைத்து இரசிகர்களின் முகத்தில் கரியை பூசிவிட்டார். தான் எதை செய்தாலும் இரசிகர்கள் இரசிப்பார்கள் என்ற அவரது மமதையின் வெளிப்பாடுதானே இது.

– நன்றி கங்காணி



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்

செப்–அக் 2001, வாசகர் கடிதம் :

செப்–அக் 2001, 'பெண் உரிமை' இதழில் வெளியான ஈவ் டீசிங் மற்றும் இரவு நேரத்தில் காவல் காக்கும் பெண்களின் வீரத்தைப் பற்றிய கருத்துக்களைப் படித்தேன்.

இரவு நேரத்தில் காவல் காக்கும் பெண்களின் துணிச்சலான செயல்களை பற்றி விளக்கியிருந்தீர்கள். இக்கருத்துக்களை படிக்கும் போது என் போன்ற பெண்கள் வேலைக்கு செல்வதற்கு துணிச்சலும், நாமும் தைரியமாக வேலைக்கு செல்லலாம் என்ற நம்பிக்கையும் ஏற்படுகிறது. "பெண் உரிமை" எங்களுக்கு "பெண் நம்பிக்கை" என்ற உண்மையை உணர்த்துகிறது, தூண்டுகோலாகவும், ஊன்று கோலாகவும் அமைகின்றது.

ஏர்வாடியில் மனநல காப்பகங்களில் பெண்களுக்கு ஏற்பட்ட பாலியல் வன்முறையை பற்றி மிக தெளிவாக விளக்கியிருந்தீர்கள். அதை படிக்கும் போது மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. இதற்கெல்லாம் காரணம் இந்த அரசியல் தானே! இந்த அரசு இதை முறையாக கவனித்து இருந்தால் இப்படிப்பட்ட கொடிய விபரிதங்களை தடுத்திருக்கலாமே! இதற்கெல்லாம் ஒரே முடிவு அரசியலை மாற்றுவது தான்! நாம் போராடுவது தான்!

கோவணக் கொடிகள் என்ற கவிதை உணர்ச்சிகளை பிரதிபலிக்கின்றது.

*சாந்தி, மதுரை*

'பெண் உரிமை' இதழில் ஈவ் டீசிங் பற்றி வந்த கட்டுரையில் ஓர் ஆணையும், பெண்யையும் குற்றம் கூறுவதில் பொருள் இல்லை. இதற்கு அனைத்துக்கும் காரணம் அரசாங்கமும், தரகு முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களும் என்று விளக்கியிருந்தது சிறப்பாக அமைந்திருந்தது.

'தலித் பெண்கள் மீதான வன்முறை' என்ற கட்டுரையில் நீங்கள் கூறிய விசயங்கள் (பெண்கள் மிகவும் கேவலப்படுத்தப்படுவதை) தெளிவாக கூறியுள்ளீர்கள். ஆனால் சில அசிங்கமான வார்த்தைகளை தவிர்த்திருந்தால் மிகவும் சிறப்பாக அமைந்திருக்கம் என்று நினைக்கிறேன்.

*விஜி*

"வியட்நாமின் நீளக்கூந்தல் படை" கட்டுரை மிகவும் நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கிறது. பெண்கள் பலவீனமானவர்கள், இரண்டாம் தர குடிமக்களாக கருதும் இந்த சமூகத்தில் முழு நேர போராளிகளாக வாழ்ந்த பெண்களை பார்க்கும் பொழுது பெண்களால் எதுவும் முடியும் என்ற நம்பிக்கை ஆழமாக வளர்ந்துள்ளது.

*அனாமிகா*

Printed by S. Theesmas, Lilly Soosai Offset, 12/1, Mohmed Hussain Lane, Royapettai, Chennai - 14. Tel : 8410357
Published and owned by P. Ajitha, 658(17/34) Rani Anna Nagar, K.K. Nagar, Chennai - 78.
Printed at Lilly Soosai Offset, 12/1, Mohmed Hussain Lane, Royapettai, Chennai - 14. Tel : 8410357
Published from 658(17/34) Rani Anna Nagar, K.K. Nagar, Chennai - 78.
Editor : P. Ajitha



படிப்பகம்

www.padippakam.com

Penn Urimai, 'Registered' TNTAM/2001/4002

# கொல்கத்தாவில் நடைபெற்ற அனைத்திந்திய பெண்கள் கருத்தரங்கம்




"பெண்கள் மீதான வன்முறைக்கெதிராய் போராடுதல்" என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கம் கொல்கத்தாவை சார்ந்த மைத்ரே சாட்டர்ஜி என்பவரின் உரையுடன் ஆகஸ்டு 27 அன்று இரண்டு நாள் கருத்தரங்கம் ஆரம்பித்தது.

டில்லி, உத்தரகண்டு, மகாராஸ்டிரம், குஜராத், ராஜஸ்தான், ஆந்திர பிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு, கேரளா, நாகலாந்து, அஸ்ஸாம் மற்றும் மேற்கு வங்கத்தை சார்ந்த ஜனநாயக மற்றும் முற்போக்கு பெண்கள் அமைப்புகள் இந்த கருத்தரங்கில் கலந்துக் கொண்டனர். 21 அமைப்புகளை தவிர, பல பெண் அறிவுஜீவிகள் உட்பட 191 பிரதிநிதிகள் கலந்து கொண்ட இக்கருத்தரங்கம் சிறப்பாய் நடந்தேறியது. வெவ்வேறு மொழிகளில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பிரதிநிதிகளின் உணர்ச்சிமிகு முழக்கங்கள் அரங்கத்தையே கலங்க வைத்தது.

'பெண்கள் மீதான குடும்ப வன்முறை' பற்றி டில்லியை சார்ந்த சகேலி அமைப்பின் ரஜ்சனா, சாதனா பேசினர். கர்நாடகத்தை சார்ந்த மகிளா ஜாகிருதியின் ஹேமா, சமூக வன்முறையை பற்றி விளக்கினார்.

28.8.2001 அன்று காலை மத வன்முறை பற்றி மகாராஸ்டிர பேராசிரியர் சுகுணா பதி விவரித்தார். உஷா வக், சாதிய வன்முறையை பற்றி உரையாற்றினார். 'தமிழ்நாட்டில் தலித் பெண்கள் மீதான வன்முறை' பற்றிய அறிக்கையை தமிழ்நாட்டை சார்ந்த 'பெண்கள் மீதான வன்முறைக் கெதிரான குழு'வின் சார்பாக சாம்பவி சமர்பித்தார்.

'அரசு பெண்கள் மீது தொடுக்கும் வன்முறை' குறித்த அமர்வை, ஆந்திர பிரதேச சைதன்ய மகிளா சமக்யாவின் விஷ்ணு பிரியா தலைமைத் தாங்க, நாகலாந்து மனித உரிமை வழக்கறிஞர் டாலி, அஸ்ஸாமை சார்ந்த நாஸ் அமைப்பினர் விவரமாக விவரித்தனர்.

– அஜிதா

படிப்பகம்